ரமணா சரணம்

மஹாலக்ஷ்மி சூர்யாநந்தன்

S. Mahalakshmi
– to be preserved.
(2 un-published songs written at the end of this book)

ஓம்
நமோ பகவதே ஸ்ரீ ரமணாய

ரமணா சரணம்

இயற்றியவர்
மஹாலக்ஷ்மி சூர்யாநந்தன்

1950-2000
50வது ஆராதனை
ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை
வருடம் 2000

முதற் பதிப்பு : மே 2000

Ramana Saranam (Tamil)

© ஸ்ரீரமணாச்ரமம், திருவண்ணாமலை

விலை: ரூ.25/-

அட்டை ஓவியம்,
சித்திரங்கள் : **பத்மவாஸன்**

பதிப்பாளர் : **ஸ்ரீ ரமணாச்ரமம்**
திருவண்ணாமலை 606 603

அச்சுக்கோர்வை : **ரிப்ளிக்கா,** சென்னை - 600 004.

அச்சிட்டோர் : **கார்த்திக் ஆஃபசெட் பிரிண்டர்ஸ்,**
சென்னை - 600 015.

சமர்ப்பணம்

'' ஸ்ரீ ரமண சந்நிதிமுறை'' பாடல்களைப்
பன்முறை பாடவைத்து என்னை ஆசீர்வதித்த
– ரமணணொளி விண்ணிடை ஜ்வலிக்கும் தாரகமாம் –
திருமுகவைக் கண்ண முருகனார் சுவாமிகள்

அவர்களுக்கு

– மஹாலக்ஷ்மி சூர்யாநந்தன்





ஆண்டவன் பாதத்திற் சரணடைக

''சரணடைந்து வாழத் தலைப்பட்ட மக்கட்
கிரணமொன்றுமில்லை யெனவே — சரண மொன்றி
யெல்லா விதத்து மிறைவனருட் செம்பதமே
நல்லோர் கடைப்பிடிக்க நன்று''

– ஸ்ரீ முருகனார்
ஸ்ரீ ரமண ஞான போதம்
எட்டாம் பாகம் உபதேச விளக்கம்
(இரண்டாம் பிரிவு, பாடல் எண் - 738)

ஓம்
நமோ பகவதே ஸ்ரீ ரமணாய

முன்னுரை

''கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை'' என்பார்களல்லவா? கவிதை ஞானமோ, இசையறிவோ, மொழி அறிவோ இல்லாத நானே ஸ்ரீமதி மகாலக்ஷ்மி சூர்யாநந்தன் இயற்றிய இப்பாட்டுத்தொகுதியைப் பார்த்தனுபவித்து ''சூப்பர்'' (மிகச்சிறந்தது) என்று சொன்னால் இப்பாட்டுகளின் தரத்திற்கு வேறு என்ன சான்று வேண்டும்?

அட்டவணையைக் கண்டதுமே, நம் ஆவலைத் தூண்டக்கூடிய பாட்டுகளின் தலைப்புகளைப் பார்த்ததும், உணவகத்தில் (ஹோட்டலில்) ''மெனு'' (உணவுவகைப்பட்டியல்) அட்டையிலுள்ள பலவித உண்டிகளின் பெயர்களைப் படித்ததுமே நாக்கில் உமிழ்நீர் ஊறுவது போல், ஓர் உணர்ச்சி ஏற்பட ஆரம்பித்து விட்டது. புன்னாகவராளியில் ''ஆடு மயிலே'', ''தூது விடல்'' (காம்போதி), கும்மி பாட்டு இவைகளைப் போன்ற விதவிதமான பாட்டுகளைப் பார்த்ததும் எனக்கு பாரதியாரின் உள்ளத்தை உருக்கும் கண்ணம்மா பாட்டுகளும், கிளிப்பாட்டும் நினைவுக்கு வந்தன.

ஸ்ரீமதி மஹாலக்ஷ்மி, பாமரமக்களுக்கும் புரியும் எளிய சொற்களை உபயோகித்து பகவான் ரமணரின் உபதேசக் கருத்துகளையும், ஆழ்ந்த தத்துவத்தையும் எவ்வளவு அழகாக பக்தி, ஞானம், அநுக்ரகம், ஓர் தலைவி (நாயகி)யின் பிரிவாற்றாமை எல்லா ரஸங்களும்

ஒழுக பாட்டுகளாக எழுதிவிட்டார்கள்? இவர், உலகெல்லாம் புகழ் பெற்ற பகவான் ரமணரிடமே ஒன்றிப் போன பேராசிரியர் சுவாமிநாதனின் புதல்வியல்லவோ? அதுதான் ஒவ்வொரு பாட்டிலும் பகவான் ரமணரின் ஸத்குரு தத்துவம் இனிமையாக ஊறியுள்ளது. ''சக்திக்கனலே'', ''ஞானகுரு'', ''பரமபவித்ர'' இவற்றைப் படிக்கும்போது ஏதோ பகவானின் அஷ்டோத்தர சதநாமாவளியைப் படிப்பது போல ஒரு பரவசம் உடலில் ஏற்பட்டது.

மேலும் மேலும் இப்படியே பகவானைப் பற்றி நிறைய எழுதியும், பாடியும் பக்தர்களின் பக்தியைத் தூண்டிவிட்டுக்கொண்டு இந்த கவிதை எழுத்தாளர் மகிழ்வுடன் நீடூழி வாழவேண்டு மென பகவானை நான் வேண்டுகிறேன்.

12-12-99
ஸ்ரீரமணாச்ரமம்
திருவண்ணாமலை

ஸ்வாமி சாந்தானந்தா
(வஸிஷ்ட குகை,
ரிஷிகேசம்)

ओं नमो भगवते श्री रमणाय

சிறப்புரை

1950-ஆம் ஆண்டில் பகவான் மகர்ஷி ரமணரின் நிர்யாணத்திற்குப் பிறகு சென்னையில் பேராசிரியர் திரு. சுவாமிநாதன் அவர்களால் ''ஸ்ரீ ரமண பக்த சபா'' ஆரம்பித்த காலம் முதல் எனக்குத் திருமதி மஹாலக்ஷ்மியை நன்கு தெரியும். அதற்கு முன்பே 1941-50 வரை பலமுறை பகவானைத் தரிசிக்க வரும் போது பேராசிரியர் சுவாமிநாதன் தனது மூத்த மகள் மஹாலக்ஷ்மி, அவளது இரு இளைய சகோதரிகள் (சாந்தா, தர்மா), மனைவி திருமதி விசாலாக்ஷி, இவர்களை ஆச்ரமத்திற்கு தன்னுடன் அழைத்துவந்து சில நாட்கள் தங்கியிருந்ததைக் கண்டதுண்டு.

சுமார் 20 ஆண்டுகள், சென்னை ஸ்ரீநிவாஸ காந்தி நிலையம், அரசு மாதர் நல இலாகா, சமூக நல போர்டு, பாலசேவிகை பயிற்சி நிலையம் முதலிய நிறுவனங்களில், மாதர், குழந்தைகள் நலப்பணிகளில் மஹாலக்ஷ்மி சிறந்த தொண்டாற்றியிருக்கிறார் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். சமூக நலப் பணிகள் மூலமாக பகவான் இவருக்கு நல்ல மனப் பக்குவத்தையும் அருளியிருப்பது நன்கு புலனாகிறது. மேலும் மஹாலக்ஷ்மி பெரிய சங்கீத வித்வான்களாகிய மணக்கால் சிவராஜய்யர், மன்னார்குடி சாம்பசிவ ஐயர் முதலியோரிடம் கர்நாடக சங்கீதம் இளமையில் பயின்றிருக்கிறார்.

சென்னை ஆழ்வார்பேட்டையில் ''தர்மாலயம்'' எனும் பேராசிரியர் K.S. இல்லத்தில் ''ஸ்ரீ ரமண பக்த சபை'' நடந்த பொழுது, பல ஆண்டுகள், ஞாயிறு

தோறும் பகவானின் ''அருணாசல அக்ஷர மணமாலை'' ராகத்துடன், மஹாலக்ஷ்மியும், அவர் சகோதரிகளும் இனிமையாக இசைக்கக் கேட்டுள்ளேன். ஸத்சங்கத்தில் முடிவு நிகழ்ச்சியாக யோகி சுத்தானந்த பாரதியின் ''ஸ்ரீ ரமண விஜயம்'' எனும் நூலிலிருந்து ''ஸத்ய சாந்தகன ஜோதீ நமோ, நமோ'', ''வாழ்க சுயம் பிரகாசம்'' எனும் இரண்டு பாட்டுகள் இவர்கள் பாடி முடிப்பது இன்னும் என் செவிகளில் கணீரென்று ஒலிப்பது போன்றுள்ளது.

ஸ்ரீ தேவராஜ முதலியாரும், நானும், ஸ்ரீமதி மஹாலக்ஷ்மிக்கு அன்புக்கட்டளையிட்டு, அவரை ஸ்ரீ முருகனாரின் ''சந்நிதி முறை'' பாடல்களை ''ஸ்ரீ ரமண பக்த சபை''யில் இசையுடன் பாடும்படி செய்தோம். அநேக பாடல்களுக்கு மஹாலக்ஷ்மியே மெட்டமைத்துள்ளார்கள்.

ஸ்ரீ முருகனார் முன்னிலையில் முதல் முதலாக ''ஸ்ரீ ரமண சந்நிதிமுறை'' பாடல்கள் சிலவற்றைப் பாடவைத்ததும் அடியேன் என்பதைப் பெருமையுடன் கூற விழைகிறேன். அதன் பிறகு ஆச்ரமத்திற்கு வரும் பொழுதெல்லாம் முருகனார் சுவாமிகளே மஹாலக்ஷ்மி யைப் பாடச்சொல்லிக் கேட்டு, மகிழ்ந்து, அவள் கேட் கும் சந்தேகங்களுக்குப் பொருளும் கூறி விளக்கியிருக் கிறார்.

பகவானின் ''ஸ்ரீ அருணாசல ஸ்துதி பஞ்சகம்,'' மற்றும் ''ஸ்ரீ ரமண ஸ்துதி பஞ்சகம்,'' ஸ்ரீ சாது ஓம், ஸ்ரீ கௌரி மீனாக்ஷி சுந்தரம், ஸ்ரீ ரமண சதாநந்த சேஷகிரி ஐயர், Dr. பத்மநாபன், ஸ்ரீ C.N. சாஸ்திரி முதலிய பக்தர்கள் பகவானைப் பற்றி பாடியுள்ள பல பாடல்களை ஸ்ரீமதி மஹாலக்ஷ்மி சென்னை, டில்லி, கல்கத்தா, பெல்காம், ஸ்ரீ ரமணாச்ரமம் முதலான இடங்களில் கர்நாடக இசையில் ச்ருதி சுத்தமாகவும், பாவத்துடனும், இனிய குரலில் பாடியுள்ளார்.

தனது 16-ம் வயதில் முதல் முறையாக பகவானை தரிசித்த அந்தக் கணத்திலிருந்தே பகவானின் கருணாகடாக்ஷம் மஹாலக்ஷ்மிக்குப் பூரணமாக கிடைத்ததென்றே கூறவேண்டும்.

இவருடைய ''ஸ்ரீ ரமண பாமாலை,'' ''ரமணா போற்றி'' என்ற இரண்டு பாடல் நூல்கள் (108 பாடல்கள்) ஏற்கனவே ''டில்லி ரமண கேந்திரம்'' வெளியிட்டுள்ளது. அப்பாடல்கள் சிலவற்றை, பெங்களூர் ஸ்ரீமதி சக்குபாய் அவர்கள் தலைமையில் ''அம்ருதவர்ஷிணி'' குழுவினர் பக்க இசைக்கருவிகளுடன் மிகவும் அழகாக, தெளிவாகப் பாடியுள்ளதை இரண்டு ஒலி நாடாக்களில் (Audio cassettes) ஸ்ரீ ரமணாச்ரமம் வெளிக்கொணர்ந்துள்ளது.

''ரமணா சரணம்'' என்ற இந்நூலும் முதலிரண்டு நூல்களிலுள்ள பாடல்களைப் போலவே இனிய தமிழ் மொழியில், எளிய நடையில், அனைவரும் பொருளுணர்ந்து, அனுபவித்துப் பாடும் வகையில் அமைந்துள்ளது. இப் பாடல்களில் பகவானின் அரும் பெரும் உபதேசங்களும், ஆன்ம தத்துவங்களும் பொதிந்துள்ளன. ஆசிரியையின் ஆழ்ந்த அந்தரங்க குரு பக்தி மிகத்தெளிவாக வெளிப்படுகிறது. பலவித கர்நாடக ராகங்களில் அமைக்கப்பட்டிருப்பதால், இவைகளைப் பாடும் இசை அன்பர்களும், செவிமடுப்போரும், பரவசமும், மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைவார்கள். ''ரமணா சரணம்'' பாடல்களைப் (பஜனை, துதி, கீர்த்தனை) படிப்போரும், பாடுவோரும், பொருளைச் சிந்திப்போரும் பகவான் ரமணரின் அருளைப் பெற்று இன்புறுவர் என்பதில் ஐயமில்லை.

ரமணபாதசேகரன்
ஸ்ரீ வத்ஸ ஸபாபதி சர்மா
(K. நடேசன்)

23.1.2000
ஸ்ரீ ரமணாச்ரமம்



பதிப்புரை

காந்திய வழியிலும், ராமபக்தி மற்றும் ரமண பக்தியிலும் மூழ்கித் திளைத்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி மகாலக்ஷ்மி சூர்யாநந்தன் அவர்களை ஸ்ரீ ரமண பக்தருலகிற்குப் புதிதாக அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. 'பத்மபூஷன்' விருது பெற்ற பேராசிரியர் கே. சுவாமிநாதன் அவர்களின் அன்னியர் அறியா ரமணத் தொண்டும் பக்தியும் அன்னாரது புதல்விகளுக்கும் தொற்றிக் கொண்டதில் (Divine Infection) வியப்பேதும் இல்லை. இக்குடும்பத்தினரின் ரமண பக்திப் பிரபாவத்தையும் அவர்கள் ரமண பக்தர்களுக்கு ஆற்றியுள்ள தொண்டினையும் விரித்துக் கூறின் அதுவே ஒரு தனிப்புத்தகமாக அமையும்.

சிறுவயதிலேயே ஸ்ரீ ரமண சந்நிதிக்குப் பலமுறை அழைத்து வரப்பட்டு ரமண அமுதத்தை அருந்திய மகாலக்ஷ்மி அவர்கள், ''ஈசனாம் ஞானி இருந்துள இடத்தில் இருப்பது முக்தி'' என்ற பிரம்ம கீதையின் வாக்கிற்கிணங்க, நிரந்தர ரமண சாந்நித்தியத்தை விரும்பி கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக தன் கணவருடன் ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு அருகிலேயே வசித்து வருகின்றார். அவரது ரமண பக்தி 1995 ஆம் ஆண்டில் 'ஸ்ரீ ரமண பாமாலை' யாக மலர்ந்து ஸ்ரீ பகவானுக்கு அலங்காரம் செய்தது. பகவானுக்கு மாலை சாற்றியவர் 1997ல் 'ரமணா போற்றி' என்ற நூலால் பூஜை செய்து (2000 ஆம் ஆண்டில்) முழுவதுமாக பகவானையே சரணடையுமுகமாக தற்போது ''ரமணா சரணம்'' என்ற நூலை இயற்றி, ஸ்ரீ ரமணாச்ரம பதிப்பாக வெளியிடப்படுகிறது. அவரது ரமண பக்தி மேலும் சிறக்குமாறு ஸ்ரீ பகவானை வேண்டி ஸ்ரீ பகவானது 'பொன் விழா நிர்யாண' ஆண்டில் இப்புத்தகத்தை வெளியிடுகின்றோம்.

17.2.2000 **வே.சு. ரமணன்**
(புனர்வசு) தலைவர், ஸ்ரீ ரமணாச்ரமம்

ஓம்
நமோ பகவதே ஸ்ரீ ரமணாய

நன்றியுரை

''சொல்லாற் பொருளாற் றுணிவிலாப்
பேதையேன்
*கல்லாக் கவியைக்கமிப்பாய் சரணம்
பேயேன் பெரும்பல் பிழை பொறுத்தாண்டவ
நீயே யெனக்கு நிலைகாண் சரணம்
என்றென் மனோவாக் கிரண்டுந் திருவடி
யன்றிமற் றொன்றை யறியா சரணம்''*

– ஸ்ரீ முருகனார்

*(ஸ்ரீ ரமண ஞானபோதம் – ஒன்பதாம் பாகம்
உபதேச விளக்கம் (மூன்றாம் பிரிவு - பாடல் எண் 1615)*

பகவான் ஸ்ரீ ரமணர் அருளாலே அவர் தாள் வணங்கி ''ரமணா சரணம்'' என்னும் இப்பாடல் நூல் அவரது பொன்விழா நிர்யாண ஆண்டில் வெளியிடப் படுகிறதென்றால் அதில் என் பங்கு யாதுமில்லை. பாடல்கள் பயனுடையனவாயின் அது என்னைப்பாட இயக்குவித்த அப்பரம் பொருளின் கருணையேயாகும். பிழைகள் இருக்குமாயின் அவை எனது அகந்தையின் குறுக்கீடேயாகும். எது எப்படியாயினும் எனக்குத் தைரியமளிப்பது — நான் வெறும் அம்புதானே: எய்தவன் இருக்க அம்பு என் செய்யும்? என்பதே.

மேலும் முருகனார் சுவாமிகளே பின்வருமாறு பாடியுள்ளாரே.*

*ஸ்ரீ ரமண ஞான போதம் – முதற்பாகம் - பக்கம் 3

''பித்தராற் சொன்னவையும் பேதையராற்
சொன்னவையும்
பத்தராற் சொன்னவையும் பன்னப்படுவனவோ?
அத்தனை நான் சொன்னவையு மவ்வாறாக்
கொள்வதன்றி
வித்தகரா மிக்கோர் பிழையாய்ந்து பேசாரே''

முதற்கண், இப்புத்தகத்தை மிக முக்கியம் வாய்ந்த தினமான பகவான் ஸ்ரீ ரமணரின் ஐம்பதாவது ஆண்டு நிர்யாண நாளான 1.5.2000 அன்று ஆஸ்ரம பதிப்பாக வெளியிட ஒப்புக் கொண்டதற்கு, ஸ்ரீ ரமணாச்ரம தலைவர் ஸ்ரீ V.S. ரமணன் அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

இந்நூலுக்கு முன்னுரை வழங்கியுள்ளவர், இமாசலத்திலுள்ள வசிஷ்ட குகையைச் சார்ந்த பரமபூஜ்ய ஸ்ரீ சாந்தானந்த புரி மகராஜ் அவர்கள். இது எனக்குக் கிடைத்த எதிர்பாராத பெரும் பாக்யமாகும். இவர் கடந்த ஆண்டுகளில் ரமணாச்ரமத்திற்கு வருகை தந்த போது, ''ஸ்ரீ ரமண பாமாலை'', ''ரமணா போற்றி'' என்ற பாட்டுப்புத்தகங்களை முழுதும் படித்துப் பார்த்து, மகிழ்ந்து ஆசிகூறியுள்ளார். 1999-ஆம் ஆண்டு, டிஸம்பர் மாதம், இவர் ஆச்ரமத்தில் ஸ்ரீ ரமண பகவானின் நூல் களுக்கு விளக்கவுரைகள் கூறி, தொடர்ச்சியாக சொற் பொழிவுகள் ஆற்றும் அதே நேரத்தில், ''ரமணா சரணம்'' பாடல்கள் எழுதப்பட்டு முடிவடைந்ததும், இவரை மிகவும் தயக்கத்துடன் அணுகி முன்னுரை எழுதி யருளுமாறு விண்ணப்பித்துக் கொண்டேன். அக்கணமே என்னிடமிருந்து கையெழுத்து பிரதிகளை வாங்கிக் கொண்டு, படித்து, உடனே முன்னுரையும் எழுதிக் கொடுத்துவிட்டார். இது அவருடைய சௌலப்யத்தை யும், தன்னடக்கத்தையும், பெருந்தன்மையையும் விளக்கு கின்றன. ஸ்ரீமத் பாகவதம், பகவத்கீதைப் பற்றிய

இவருடைய ஆங்கில புத்தகங்கள் கன்னடத்திலும், தெலுங்கிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவருடைய ''ரமண சுப்ரபாதம்'' (ஸமஸ்கிருதம்) ஒலி நாடாவில் பதிவு செய்து ஸ்ரீ ரமணாச்ரமம் வெளியிட்டுள்ளது. இப்பெரும் மதிப்புக்குரிய சுவாமிகளுக்கு என் உளங்கனிந்த தாழ்மையான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு தலைகுனிந்து வணங்குகிறேன்.

இப்புத்தகத்திற்குச் சிறப்புரை வழக்கி என்னைப் பெரிதும் கௌரவித்துள்ளார் நெடுநாள் ஆச்ரம வாசியாகிய ரணமபாதசேகரன், ஸ்ரீவத்ஸ ஸபாபதி சர்மா (ஸ்ரீ K. நடேசன்) அவர்கள். இவர் திருவருணையிலேயே பிறந்து வளர்ந்து, இவரது எட்டாம் பிராயத்திலிருந்தே பகவான் ரமணருடன் நெருங்கிப்பழகியவர். விடியற் காலையில் இவரைத் துயில் எழுப்புவதற்கு, பகவானே தனது கால் கட்டைவிரலால் இவர் தலையை நெரடி, ''நடேசா எழுந்திரு'' என்று சொல்லியிருக்கிறாராம்! இவர், பகவானின் வடமொழி, தமிழ்மொழி நூல்களை நன்றாய் கற்றறிந்தவர். முக்கியமாக காவ்யகண்ட கணபதி முனியின் நூல்களைச் சேகரித்து, பன்முறை அவைகளை ஊன்றி, ரஸித்துப்படித்து, அதில் தன் மனதைப் பறி கொடுத்தவர். இம்முதிய சிறந்த ரமண பக்தருக்கு என் ஆழ்ந்த நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலிலுள்ள எல்லா பாடல்களையும் பொறுமையுடன் படித்து, ஆமோதித்து, இவைகளைப் புத்தக வடிவில் கொண்டு வர எனக்கு மிகவும் ஊக்கமளித்த திரு லா.சு. ரங்கராஜன் அவர்களுக்கும், ஸ்ரீமதி T.R. கனகம்மாள் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகும்.

சிறந்த ஓவியர் ஸ்ரீ பத்மவாஸன் தொடர்ந்து இந்த புத்தகமும் அழகுற அமையவேண்டி பாடல்களுக்குத்

தகுந்த ஓவியங்கள் வரைந்து, சலியாது பூரண உதவி ஈந்தமைக்கு என் அன்புமிக்க நன்றியை வெளியிட விழைகிறேன்.

வழக்கம்போல் இந்நூலையும் பொறுப்புடன் குறித்த காலத்தில் வெகு நேர்த்தியாக அச்சிட்டுக் கொடுத்தமைக்கு கார்த்திக் ஆஃசெட் பிரிண்டர்ஸ் ஸ்ரீ T.V. வெங்கடராமன் அவர்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றியை நவில அவாவுகிறேன்.

நம்மை ஆட்டுவிக்கும் அவனருளால் ''ரமணா சரணம்'' பாடல்கள் பாடி, மகிழ்ந்து, சிந்தித்து உய்ந்திட பரமன் ரமணன் சரணம் பற்றுவோமாக என பிரார்த்தித்து, அனைத்து பக்தர்களையும் சிரம் சாய்த்து வணங்குகிறேன்.

மஹாலக்ஷ்மி சூர்யாநந்தன்
''அருணாசல சிவா''
ஸ்ரீ ரமண நகர்
திருவண்ணாமலை - 606603.

4-3-2000
மஹா சிவராத்திரி





உள்ளுறை

முன்னுரை		...	... v
சிறப்புரை		...	... vii
பதிப்புரை		...	... xi
நன்றியுரை		...	... xii

இறை அருள்

	தலைப்பு	ராகம்	பக்கம்
1.	விநாயகர் துதி	நாட்டை	... 1
2.	ரமணன் சரணம்	மோகனம்	... 1
3.	கோலக்ஷ்மி பெற்ற பேறு	ஸஹானா	... 1

I. பஜனைப்பாக்கள்

1.	திருவடி சரணம்	பௌளி	... 3
2.	பரமபவித்ர	புன்னாகவராளி	... 5
3.	சக்திக்கனலே	மாண்டு	... 6
4.	ஓம் ரமணா	யமுனாகல்யாணி	... 7
5.	ஹர ஹர ரமணா	தர்பாரிகானடா	... 8
6.	ஜயகுரு ரமணா	பீம்ப்ளாஸ்	... 9
7.	ஞானகுரு	யமுனாகல்யாணி	... 10
8.	ரமணனை உள்குவீர்	குந்தலவராளி	... 11
9.	ஆனந்த ரமணேசா	பாக்யஸ்ரீ	... 12
10.	ஹர ஹரோஹரா	ஹம்ஸத்வனி	... 13
11.	அழகு சுந்தர நந்தனன்	ஆரபி	... 14
12.	நாலந்த வேதப்பொருளின்	செஞ்சுருட்டி	... 15

II. துதிப்பாக்கள்

13.	ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய	சிந்துபைரவி	... 16
14.	ரமணா சரணம்	நாட்டை	... 18
15.	பற்றுக, பற்றுக	சுருட்டி	... 19
16.	நின்செவி கேட்க	நீலாம்பரி	... 20
17.	நொடியும் விடாது	தேஷ்	... 21
18.	ரமணா எமைக் காத்தருளாய்	ராகமாலிகை	... 22
19.	ஆதி அந்தமில்லா	ஹுஸேனி	... 24

	தலைப்பு	ராகம்	பக்கம்
20.	ஜகத்தீரே	பெஹாக்	... 25
21.	மலைமருந்து	அடாணா	... 26
22.	ஞானமார்க்கத்துக்குகந்த குருபரன்	ராகமாலிகை	... 27
23.	பராபரக்கண்ணி	செஞ்சுருட்டி	... 29
24.	தூது விடல்	காம்போதி	... 30
25.	திருவாரூரில் பிறந்திடிலே	மாண்டு	... 33
26.	ஆடு மயிலே	புன்னாகவராளி	... 34
27.	கும்மி பாட்டு	ராகமாலிகை	... 37
28.	மாரமணன் வழி நடப்போம்	ஆனந்த பைரவி	... 39
III	**கீர்த்தனைகள்**		
29.	ரமணா, ரமணா	தேஷ்	... 41
30.	தஞ்சமென்றே	மோகனம்	... 42
31.	நம்பியிரு நெஞ்சமே	திலங்கு	... 43
32.	அதிரமணீயமானது	கல்யாணி	... 44
33.	ஸதா நின்னையே	சிவரஞ்சனி	... 45
34.	என்னை நீ	நவரஸகானடா	... 46
35.	எந்நேரமும்	ஜோன்புரி	... 47
36.	எந்தன் மனம்	தோடி	... 48
37.	தன்னை அறிந்து	கமாஸ்	... 49
38.	அண்ணாமலையானே	நாதநாமக்கிரியை	... 50
39.	நீ நினைத்தால்	தர்பாரிகானடா	... 52
40.	உள்ளமெனும்	சாமா	... 53
41.	தேடித்தேடி	ஆனந்தபைரவி	... 55
42.	எந்தன் பிறவிக்கடலை	சுபபந்துவராளி	... 56
43.	பற்று முற்றும்	முகாரி	... 57
44.	அவனையே நம்பி	பெஹாக்	... 58
45.	மனிதா அறிந்துகொள்	மலையமாருதம்	... 59
46.	உனதருள்	நளினகாந்தி	... 60
47.	ஒன்றே உண்டு	பீலு	... 61
48.	நீயே குருவாவாய்	யதுகுலகாம்போதி	... 62
49.	கருணையே உருவாய்	அமீர்கல்யாணி	... 63
50.	ஐயா ரமணா	சௌராஷ்ட்ரம்	... 64
51.	ரமணா என்னும் மூன்றெழுத்து	மத்யமாவதி	... 66

அருள் வேண்டல்

விநாயகர் துதி

ராகம்: நாட்டை தாளம்: ஆதி
(விருத்தமாகவும் பாடலாம்)

அருணை கோபுரத்துள் மேவும் முதல்வா விக்கின விநாயகனே
அருணை ரமணன் ஞானமகாகுரு சரணாரவிந்தம்தனை
ஆராதித்திசைத்திட உமை இறைஞ்சி வணங்குகிறேன் – நீயே
ஆசிநல்கி எந்தன் புந்திதனில் வந்தமர்ந்து பாக்கள் வடித்தருள்

ரமணன் சரணம்

ராகம்: மோகனம் தாளம்: திரிபுடை
(விருத்தமாகவும் பாடலாம்)

குரு ரமணன் சரணமொன்றே நம்மைக் காத்திடும்
அருவுரு பரமனவன் மலர்பதம் இறுகுறப் பற்றிடில்
வருமோ இடரேதும்; சாருமோ தீப்பிறவி இனியும்
இருத்திடுமே எந்நாளும் தன்நிலையாம் இன்ப வெள்ளத்தே

கோலக்ஷ்மி பெற்ற பேறு

ராகம்: ஸஹானா தாளம்: ரூபகம்
(விருத்தமாகவும் பாடலாம்)

''ரமணா சரணம்' என ரமணன் கமலச் சரணமதியே
அம்மம்மா! தனது சென்னி தோய்ந்து திளைத்திடவே
மாதவமே மாதா கோலக்ஷ்மி புரிந்தனளே
மானிடர் யார்க்கும் கிட்டா பேறு பெற்றுய்ந்தனளே.

I. பஜனைப்பாக்கள்

1. திருவடி சரணம்

ராகம்: பௌளி   தாளம்: ஆதி

அருணைஜோதி ரமணா நின் திருவடி சரணம்
அசலமானோய் ரமணா நின் திருவடி சரணம்
அத்துவிதகுரு ரமணா நின் திருவடி சரணம்
அந்தர்யாமி ரமணா நின் திருவடி சரணம்
அல்லல் அழிப்போய் ரமணா நின் திருவடி சரணம்
அகந்தை அகற்றுவோய் ரமணா நின் திருவடி சரணம்
அச்சம் தவிர்ப்போய் ரமணா நின் திருவடி சரணம்
அபயம் அருள்வோய் ரமணா நின் திருவடி சரணம்
அருவுரு ஆனோய் ரமணா நின் திருவடி சரணம்
அருள்மழை பொழிவோய் ரமணா நின் திருவடி சரணம்

ஐயம்களைவோய் ரமணா நின் திருவடி சரணம்
ஒலிவடிவானோய் ரமணா நின் திருவடி சரணம்
ஒளிமயமானோய் ரமணா நின் திருவடி சரணம்
மருள் நீக்கிடுவோய் ரமணா நின் திருவடி சரணம்
மாயை மாய்ப்போய் ரமணா நின் திருவடி சரணம்
நல்லனநல்குவோய் ரமணா நின் திருவடி சரணம்
நன்மை பயக்குவோய் ரமணா நின் திருவடி சரணம்
மோனத்துறைவோய் ரமணா நின் திருவடி சரணம்
ஞானமளிப்போய் ரமணா நின் திருவடி சரணம்
சஞ்சலம் தீர்ப்போய் ரமணா நின் திருவடி சரணம்
சங்கடஹரண ரமணா நின் திருவடி சரணம்
தங்கக்கையோன் ரமணா நின் திருவடி சரணம்
தந்தை தாயோன் ரமணா நின் திருவடி சரணம்
தண்ணளி சொரிவோய் ரமணா நின் திருவடி சரணம்
உணர்வே ஆனோய் ரமணா நின் திருவடி சரணம்
பந்தமறுப்போய் ரமணா நின் திருவடி சரணம்
காந்தக்கண்ணோய் ரமணா நின் திருவடி சரணம்

சாந்தமாய் சமைந்தோய் ரமணா நின் திருவடி சரணம்
வல்வினை விரட்டுவோய் ரமணா நின் திருவடி
சரணம்
வையகம் வாழ்வித்தோய் ரமணா நின் திருவடி
சரணம்
காலனை வென்றோய் ரமணா நின் திருவடி சரணம்
காலத்தைக் கடந்தோய் ரமணா நின் திருவடி சரணம்
தீதெல்லாம் தீய்ப்போய் ரமணா நின் திருவடி சரணம்
தீப்பிணி தகர்ப்போய் ரமணா நின் திருவடி சரணம்
விதி, மதி, பதி நீ ரமணா நின் திருவடி சரணம்
கதி நீ ஆனாய் ரமணா நின் திருவடி சரணம்
நீ யன்றிவேறில்லை ரமணா நின் திருவடி சரணம்
என்றென்றும் உள்ளோய் ரமணா நின் திருவடி
சரணம்
எங்கும் நிறைந்தோய் ரமணா நின் திருவடி சரணம்
மங்கள நாயக ரமணா நின் திருவடி சரணம்

2. பரமபவித்ர

ராகம்: புன்னாகவராளி　　　　　　　　தாளம்: ரூபகம்

பரமபவித்ர, பரமேஸ்வர – ரமணா
பரமபாவன, பரமாசார்ய – ரமணா
பரமக்ருபாள, பரிபூர்ணானந்த – ரமணா
பரமச்ரேஷ்ட, பராத்பர, பசுபதி – ரமணா

பரமபுருஷ, பரமஹம்ஸ – ரமணா
பரமாத்ம, பரமபாக்யவரத – ரமணா
பவநாசக, பந்தவிமோசன – ரமணா
பவரோக வைத்ய, பாசவிதூர – ரமணா

ப்ரேமரூப, ப்ரியகுணபரித – ரமணா
ப்ரஸன்னவதன, பரஞ்ஜோதிப்ரகாச – ரமணா
ப்ரம்மஸ்வரூப, ப்ரபஞ்சரக்ஷக ஸ்ரீ – ரமணா
பாஹிமாம், பாஹிமாம், பகவான் ஸ்ரீ – ரமணா



3. சக்திக்கனலே

ராகம்: மாண்டு தாளம்: ரூபகம்

சக்திக்கனலே சிவரமணா நமோ நமோ
சகல லோகாதார ரமணா நமோ நமோ
சுத்த சைத்தன்ய ரமணா நமோ நமோ
சாந்த ஸ்வபாவ ரமணா நமோ நமோ
ஆன்ம ஸாக்ஷாத்கார ரமணா நமோ நமோ
ஆன்ம ஞான போதக ரமணா நமோ நமோ
ஆனந்தாம்ருத வர்ஷக ரமணா நமோ நமோ
மோனோபதேசிக ரமணா நமோ நமோ
பேரானந்தவடிவ ரமணா நமோ நமோ
பேரகண்ட ரூப ரமணா நமோ நமோ
பக்தர் ஸஹாய ரமணா நமோ நமோ
ஸத்சித்ஸ்வரூப ரமணா நமோ நமோ
ஸர்வகுண ஸம்பன்ன ரமணா நமோ நமோ
ஸர்வதர்ம பரிபாலக ரமணா நமோ நமோ
ஸர்வாத்ம வாஸ ரமணா நமோ நமோ
ஸர்வலோகாசார்ய ரமணா நமோ நமோ
ஸ்திதப்ரஞ்ய ஸ்ரேஷ்ட ரமணா நமோ நமோ
நித்ய நிரஞ்சன ரமணா நமோ நமோ
நிர்விகல்ப சுக போக ரமணா நமோ நமோ
கீர்த்திப்ரபாவ ரமணா நமோ நமோ
கருணா விலாஸ ரமணா நமோ நமோ
அருணாசலேச ரமணா நமோ நமோ
ஸ்வயம் ஜோதிப்ரகாச ரமணா நமோ நமோ
ஸர்வ மங்கள தாயக ரமணா நமோ நமோ



4. ஓம் ரமணா

ராகம்: யமுனாகல்யாணி தாளம்: ரூபகம்

ஓம் ரமணா, ஓம் ரமணா, ஓராறுமுக முருகா
– ஓம் ரமணா
ஓம் ரமணா, ஓம் ரமணா, ஓரெழுத்தில் ஆறெழுத்தோதிய
– ஓம் ரமணா
ஓம் ரமணா, ஓம் ரமணா, ஓங்கார நாதமே
– ஓம் ரமணா
ஓம் ரமணா, ஓம் ரமணா, ஓதும் வேதப்பொருளே
– ஓம் ரமணா
ஓம் ரமணா, ஓம் ரமணா, ஓங்கண்ணாமலையோனே
– ஓம் ரமணா
ஓம் ரமணா, ஓம் ரமணா, ஓங்கும் புகழ் ஞானியே
– ஓம் ரமணா
ஓம் ரமணா, ஓம் ரமணா, ஓசை ஒலியானவனே
– ஓம் ரமணா
ஓம் ரமணா, ஓம் ரமணா, ஓர் ஆர்வொளியாய்
ஒளிர்வோனே – ஓம் ரமணா
ஓம் ரமணா, ஓம் ரமணா, ஒருருவம் பூண்ட அருவமே
– ஓம் ரமணா
ஓம் ரமணா, ஓம் ரமணா, ஓமெனவே உயிர்தோறும்
உறையும் – ஓம் ரமணா

5. ஹர ஹர ரமணா

ராகம்: தர்பாரிகானடா | தாளம்: ஆதி

ஹர ஹர ரமணா, சிவ சிவரமணா
ஹர ஹர சுந்தர வேங்கடரமணா
ஹர ஹர ரமணா அழகு ரமணா
ஹர ஹர திருச்சுழியுதித்த ரமணா

ஹர ஹர ரமணா, மௌனகுரு ரமணா
ஹர ஹர ஞானோபதேசிக ரமணா
ஹர ஹர ரமணா அருணை ரமணா
ஹர ஹர கருணாகடாக்ஷ ரமணா

ஹர ஹர ரமணா சதாசிவ ரமணா
ஹர ஹர சத்சிதானந்த ரமணா
ஹர ஹர ரமணா பராத்பர ரமணா
ஹர ஹர பரமாத்ம ஸ்வரூப ரமணா

ஹர ஹர ரமணா ஸர்வேச ரமணா
ஹர ஹர ஸர்வலோக ரக்ஷக ரமணா
ஹர ஹர ரமணா ஜயஜய ரமணா
ஹர ஹர ஜகத்தொளிர் பரஞ்ஜோதி ரமணா



6. ஜயகுரு ரமணா

ராகம்: பீம்ப்ளாஸ் 		தாளம்: ஆதி

பல்லவி

ஜயகுரு ரமணா, ஜயகுரு ரமணா
ஜய ஜய ஜய ஜய, சத்குரு ரமணா

சரணங்கள்

ஜகத்ஜீவர் உய்ந்திடவே அவதரித்த ரமணா
ஜகம் புகழ் ஞான குருவே சரணம் ரமணா
(ஜயகுரு ரமணா)

ஜகத்தொளிர் ஜோதிஸ்வரூப, ஜய குரு ரமணா
ஜோதிச்சுடராய் எம்மிதயத்தொளிர்வதும் நீயே ரமணா
(ஜயகுரு ரமணா)

ஜகமாயையிலுழல்வோர் கலங்கரை விளக்கமே
ரமணா
ஜகமாயையினின்றெமை மீட்டருள்வாய் குரு ரமணா
(ஜயகுரு ரமணா)

ஜனனமரண பிணிக்கோர் அருமருந்தே குரு ரமணா
ஜன்மசாபல்யம் அளித்தெமை காத்தருள்வாய்
குரு ரமணா (ஜயகுரு ரமணா)



7. ஞானகுரு

ராகம்: யமுனாகல்யாணி தாளம்: ஆதி

ஞானகுரு, மோனகுரு, ரமணகுரு ரக்ஷமாம்
சாந்தகுரு, சத்யகுரு, ரமணகுரு ரக்ஷமாம்
ஜோதிகுரு, சிவகுரு, ரமணகுரு ரக்ஷமாம்
ஜயகுரு, ஜகத்குரு, ரமணகுரு ரக்ஷமாம்

பரமகுரு, பரிபூர்ணானந்தகுரு ரக்ஷமாம்
பரமாத்மகுரு, ப்ரம்மானந்தகுரு ரக்ஷமாம்
சத்குரு, சத்சிதானந்தகுரு ரக்ஷமாம்
சின்மயகுரு, சதாசிவகுரு ரக்ஷமாம்

அருட்ஜோதி, ஆத்மஜோதி, ரமணஜோதி ரக்ஷமாம்
பரஞ்ஜோதி, அருணைஜோதி, ரமணஜோதி ரக்ஷமாம்
ஸ்வயம் ஜோதி, சிவஜோதி, ரமணஜோதி ரக்ஷமாம்
ஸத்யஜோதி, ஸர்வஜோதி, ரமணஜோதி ரக்ஷமாம்

ரமணஜோதி ரக்ஷமாம், ரமணஜோதி ரக்ஷமாம்
ரமணஜோதி ரக்ஷமாம், ரமணஜோதி ரக்ஷமாம்
ரமணஜோதி ரக்ஷமாம், ரமணஜோதி ரக்ஷமாம்
ரமணஜோதி ரக்ஷமாம், ரமணஜோதி ரக்ஷமாம்



8. ரமணனை உள்குவீர்

ராகம்: குந்தலவராளி

தாளம்: ஆதி

ரமணனை உள்குவீர் – மரணம்தனை வெல்வீரே
ரமணனை நினைந்தே – உய்ந்திடுவீர் நீரே

ரமணன் என்பீர் – சரணம் அடைவீரே
ரமணன் பதம்தனை – சேர்ந்திடுவீர் நீரே

ரமணனை மனதில் – பதித்திடுவீரே
ரமணானந்தத்தில் – திளைத்திடுவீரே

ரமண அமுதம் – பருகிடுவீரே
ரமண ஒளியொடு – ஒன்றிடுவீரே

ரமணஜோதி பரவிடவே – ஜகத்தில் நீரே
ரமணனை ஓதி – பணிந்திடுவீரே

ரமணனைத்தியானிப்பீர் – ப்ரஹ்மத்தை உணர்வீரே
ரமணனைச்சிந்திப்பீர் – சிவத்துவம் எய்துவீர் நீரே

9. ஆனந்த ரமணேசா

ராகம்: பாக்யஸ்ரீ தாளம்: ஆதி

ஆனந்த ரமணேசா, மௌனேசா, ஸர்வேசா
ஆன்மவிசார போதகா, ஆன்மஜோதி ப்ரகாசா
அருணாத்ரீசா, அசலா, சிதாகாசா
அருள் விலாஸா, ம்ருதுபாஷா, மந்தஹாஸா

அபயஹஸ்தா, அங்கிதநாமா, அம்புஜநேத்ரா
அவதாரபுருஷா, கலியுகவரதா, கருணாப்ரவாஹா
அதி அத்புத சரித்ரா, ஸத்யஸ்வரூபா, பக்தஜனபோஷகா
அதி சுந்தரேசா, சாந்தஸ்வபாவா, ஸர்வஸமபாவா

அஹமஹம்ஸ்புரணா, ஆத்மாராமா, அமலா, அக்ஷயா
அஹங்காரஸம்ஹாரா, ஸம்ஸாரார்ணவ தாரகேசா
அகிலாண்டநாயகா, அனந்தகோடி ஜன்மநாசகா
அம்ருதவர்ஷகா, மங்களதாயகா, மஹாலிங்கேசா
பாஹிமாம், பாஹிமாம் ஸ்ரீ ரமணமஹாலிங்கேசா
பாஹிமாம், பாஹிமாம் ஸ்ரீ ரமணமஹாலிங்கேசா



10. ஹர ஹரோஹரா

ராகம்: ஹம்ஸத்வனி தாளம்: ஆதி

அண்ணாமலை ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
அழகு சுந்தர ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
அருட்சுடர் ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
அகண்டவடிவ ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
அந்தராத்ம ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
அபயகர ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
ஆன்மஜோதி ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
ஞானசூரிய ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
மோன மொழி ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
சின்மய ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
கம்பீர ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
கைவல்ய ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
தத்வார்த்த ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
தற்பர ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
புண்யமூர்த்தி ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
பூர்ணசந்திர ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
ப்ரணவரூப ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
பரப்ரம்ம ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
சிவஸ்வரூப ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா
ஸர்வமங்கள ரமணேசனுக்கு ஹர ஹரோஹரா



11. அழகு சுந்தர நந்தனன்

ராகம்: ஆரபி தாளம்: ஏகம்

அழகு சுந்தர நந்தனன் – ரமணா ஜய ஜய
அன்புருவானோய் – ரமணா ஜய ஜய
ஆருயிர் தலைவா – ரமணா ஜய ஜய
ஆதிபரம்பொருள் – ரமணா ஜய ஜய
இகபர சாதக – ரமணா ஜய ஜய
இசையின் இசைவே – ரமணா ஜய ஜய
ஈடிணை இல்லா – ரமணா ஜய ஜய
ஈசன் நீயே – ரமணா ஜய ஜய
உண்மை நிலையே – ரமணா ஜய ஜய
உள்ளொளிர் உணர்வே – ரமணா ஜய ஜய
ஊழ்வினையழிக்கும் – ரமணா ஜய ஜய
ஊறும் அருள்விழி – ரமணா ஜய ஜய
எல்லையில்லோய் – ரமணா ஜய ஜய
எல்லாமுமானோய் – ரமணா ஜய ஜய
ஏழுலகாளும் – ரமணா ஜய ஜய
ஏகமெய்ப்பொருளே – ரமணா ஜய ஜய
ஐம்பொறியடக்கிய – ரமணா ஜய ஜய
ஐயம் அகற்றும் – ரமணா ஜய ஜய
ஒளி மய ஞானி – ரமணா ஜய ஜய
ஒப்புயர்வில்லோய் – ரமணா ஜய ஜய
ஓங்காரவுரு – ரமணா ஜய ஜய
ஓகை ஈவோய் – ரமணா ஜய ஜய
ஔவையினும் அருள் – ரமணா ஜய ஜய
ஔடதம் நல்கும் – ரமணா ஜய ஜய



12. நாலந்த வேதப்பொருளின்

ராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

நாலந்தவேதப்பொருளின் ஸாரமே – நமோ நமோ
நாதவடிவான ஓங்கார ரூபமே – நமோ நமோ
நாம ரூபம் பூண்டவதரித்த அரூபமே – நமோ நமோ
– ஸ்ரீ ரமணேசா

நானெனுமகந்தை நசித்திடென்ற ஞானேசா
– நமோ நமோ
''நான் யார்'' அஸ்திரம் தந்தருளிய நாதா
– நமோ நமோ
''நான், நான்'' என நம்முள் ஒளிரும் ஒளியே
– நமோ நமோ –
ஸ்ரீ ரமணேசா

நம்மை நாமுணர வழிகாட்டும் குருவே – நமோ நமோ
நம்மை அறிந்திடலே வீடுபேறென்ற இறையே
– நமோ நமோ
நமனுக்கும் நமனான நீலகண்டனே – நமோ நமோ
– ஸ்ரீ ரமணேசா

நாளும் நம்மைக் காத்தருளும் நாயகனே – நமோ நமோ
நாளும் மிளிரும் பரமான்ம ஜோதியே – நமோ நமோ
நாளும் மங்களமருளும் மாதேவே – நமோ நமோ
– ஸ்ரீ ரமணேசா



II. துதிப்பாக்கள்

13. ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய

ராகம்: சிந்துபைரவி   தாளம்: ஆதி

பல்லவி

''ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய'' எனும்
மந்திரம் அதி அற்புத சுந்தர மந்திரமாம்
அம்மம்மா! அது ஓர் அரும் பெரும் மந்திரமாம்
எம்மால் இயம்பலாகுமோ அதன் மகிமைதனை
(ஓம் நமோ)

சரணம்

1. ஓங்கார ரூப ரமணனின் ஈறாரெழுத்து மந்திரமாம்
மங்களங்கள் நல்கிடும் திவ்ய தாரக மந்திரமாம்
நம்மைத்தானான தன்மயத்து நிலைத்திடும்
மந்திரமாம்
சம்சாரக்கடல் கடந்து கரைசேர்த்திடும் மந்திரமாம்
(ஓம் நமோ)

2. ஓதவோத கற்பூர தீபமென ஜீவபோதம் நசிக்கும்
மந்திரமாம்
ஒடுங்கியுளத்தில் ஆங்காரமழி மோனம்சேர்
மந்திரமாம்
அபயமளித்தஞ்சலென அச்சம் தவிர்க்கும் மந்திரமாம்
அகத்தில் சித்தமடங்க சுத்தசிவத்திலாழ்த்தும்
மந்திரமாம்
(ஓம் நமோ)



3. இம்மை மறுமை எம்மை இன்பாயாளும்
மந்திரமாம்
நம்மான்ம சொரூபத்திருத்தும் பேரானந்த
மந்திரமாம்
அதுவே நம்முள் ''அஹமஹம்'' எனும் மூல
மந்திரமாம்
அதுவே நமை ஒளிர்விக்கும் மெய்ஞ்ஞான
மந்திரமாம்
(ஓம் நமோ)



14. ரமணா சரணம்

ராகம்: நாட்டை தாளம்: ஆதி

மலையெனத்தோன்றும் துன்பம் அனைத்தும்
நொடியில் துடைப்போய் ரமணா சரணம்

அலையலையாய் வரும் அல்லலெலாம்
அறவே அழிப்போய் ரமணா சரணம்

கலையா மோனம் தனையருளும்
அண்ணாமலையானே, ரமணா சரணம்

வலையாம் பிறவிதளைதனைக்களையும்
ஐயா வேங்கட ரமணா சரணம்

தலையாம் மார்க்கம் ''நான் யார்'' விசாரம்
என்ற தலைவா ரமணா சரணம்

புலையனேனுக்கும் புகலிடம் தந்திடும்
புனிதத்தேவே ரமணா சரணம்

இலையாம் மரணபீதியென அபயம்
அளிக்கும் இறைவா ரமணா சரணம்

எலையிலாக் கருணையால் எம்மை என்றும்
காக்கும் கடவுளே ரமணா சரணம்

ரமணா சரணம், ரமணா சரணம்
ரமணா சரணம், ரமணா சரணம்



15. பற்றுக, பற்றுக

ராகம்: சுருட்டி　　　　　　　　　　தாளம்: ஏகம்

பற்றுக, பற்றுக என்றும் பற்றுக
　　ஸ்ரீ ரமணன் பொற்பாதம் தனை
பற்றுகள் முற்றிலும் அறுந்திடவே
　　யமபயம் தான் அகன்றிடவே
ஏற்றுக, ஏற்றுக என்றும் ஏற்றுக
　　ரமணீயதீபம் இதயம் தனிலே
பற்றிய மாசெலாம் பொசுங்கிடவே
　　பரமாத்ம ஜோதி ஜ்வலித்திடவே

போற்றுக, போற்றுக என்றும் போற்றுக
　　பரசிவ ரமணன் திருப்புகழ்தனை
போற்றுக பார்மிசைதனில் எங்கும்
　　ஞானச்சுடர் ஒளி பரவிடவே
போற்றிப் பணிந்திடுவோம் நாமே
　　ஒன்றே உளதென்றுணர்ந்திடுவோமே
போற்றி நீராடிடுவோம் நாளும்
　　ரமணானந்தமாம் தீர்த்தத்திலே



16. நின்செவி கேட்க

ராகம்: நீலாம்பரி தாளம்: ஆதி

நின் செவி கேட்க, நாளும் – ரமணா
நின் புகழ் நாமம், நான் நவின்றேத்தி
நின் நிலைபெற நல்குவாய் நின்னருளே (2)

நின் உளம் குளிர, நாளும் – ரமணா
நின் பொற்பாதம், நான் தலைவணங்கி
நின் பதமடைய நல்குவாய் நின்னருளே (2)

நின் மனம் மகிழ, நாளும் – ரமணா
நின் மோனானந்தத்தில், நான் மூழ்கி
நின்னுரு கலந்திட நல்குவாய் நின்னருளே (2)



17. நொடியும் விடாது

ராகம்: தேஷ் தாளம்: ஆதி

நொடியும் விடாது நவில்வாய் ஸ்ரீ ரமண நாமமே
நாடியும் மூச்சும் அடங்கும் முன்னே, நெஞ்சமே – நீ
(நொடியும்)

நாடிடுவாய் எந்நாளும் நல்லருணை ஸ்ரீ ரமணன் பதமே
நாடிடுமோ பின் ஏதும் வல்வினை நம்மை, நெஞ்சமே
(நொடியும்)

நாடு, காடெனத்திரியாது, புரிந்திடுவாய் ரமண
தியானமே
நாடும் ஆனந்தவெள்ளம் பொங்கிடும் நம்முள்ளே,
நெஞ்சமே
(நொடியும்)

நாடி உள்ளே, எண்ணங்கள் நசிக்கக் கண்டிடுவாய்
ரமண ஒளியை
நாடிடும் வீடுபேறடைந்து அமைதியுறலாம், ஆதலின்
நெஞ்சமே
(நொடியும்)



18. ரமணா எமைக் காத்தருளாய்

ராகமாலிகை

ராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி

அம்மையும் அப்பனும் அனைத்துமானவனே
 – ரமணா எமைக் காத்தருளாய்
அண்ணாமலையில் கொலு அமர்ந்திருப்பவனே
 – ரமணா எமைக் காத்தருளாய்
ஆதிபரம்பொருளாய் திகழ்பவனே
 – ரமணா எமைக் காத்தருளாய்
ஆனந்தமே தன்னியல்பாய் அமைந்தவனே
 – ரமணா எமைக் காத்தருளாய்

ராகம்: மோகனம்

இன்றும், அன்றும், என்றும் இருப்பவனே
 – ரமணா எமைக் காத்தருளாய்
இதுவும், அதுவும், எதுவும் ஆனவனே
 – ரமணா எமைக் காத்தருளாய்
ஈடும், இணையும் இல்லா இறையோனே
 – ரமணா எமைக் காத்தருளாய்
ஈசனே வந்திப்புவியில் உதித்தவனே
 – ரமணா எமைக் காத்தருளாய்

ராகம்: ஸஹானா

உள்ளதும் உணர்வுமொன்றென்று உணர்த்தியவனே
 – ரமணா எமைக் காத்தருளாய்
உள்ளாழ்ந்துனை உணர்க என்றிசைத்தோனே
 – ரமணா எமைக் காத்தருளாய்
ஊர் சுற்றுமுளம் அழித்திடென்றறைந்தவனே
 – ரமணா எமைக் காத்தருளாய்
ஊடுருவும் விழியால் ஊழ்வினை ஒழிப்பவனே
 – ரமணா எமைக் காத்தருளாய்

ராகம்: ஹிந்தோளம்

என்றும் உளதான்மா என்றறிவித்தோனே
- ரமணா எமைக் காத்தருளாய்
எதுவும் உன் செயலிலிலையென மொழிந்தவனே
- ரமணா எமைக் காத்தருளாய்
''ஏன் கவலை இனி'' என அபயவாக்கருளியவனே
- ரமணா எமைக் காத்தருளாய்
ஏங்கும் அடியவர்க்கு இரங்கிடும் இனியோனே
- ரமணா எமைக் காத்தருளாய்

ராகம்: காப்பி

ஐம்பூதவுடல் நாமிலையென புகட்டியவனே
- ரமணா எமைக் காத்தருளாய்
ஐயமின்றி யாவர்க்கும் உண்டு வீடென்றவனே
- ரமணா எமைக் காத்தருளாய்
ஒளிவடிவாய் அருணகிரிதனில் ஒன்றியவனே
- ரமணா எமைக் காத்தருளாய்
ஒளிரும் தூய ஞானக் கதிரவனே
- ரமணா எமைக் காத்தருளாய்

ராகம்: ஷண்முகப்பிரியா

ஓங்காரப்பொருளான ஒலியுருவமே
- ரமணா எமைக் காத்தருளாய்
ஓதும் வேதஸாரத்தின் நாதஸ்வரூபமே
- ரமணா எமைக் காத்தருளாய்
ஔவையினும் பேரருள் பொழியும் பேராளனே
- ரமணா எமைக் காத்தருளாய்
ஔடதம் ஈந்திடும் சிரஞ்சீவியே
- ரமணா எமைக் காத்தருளாய்

19. ஆதி அந்தமில்லா

ராகம்: ஹுஸேனி　　　　　　　　　　　　　　　　தாளம்: ரூபகம்

ஆதி அந்தமில்லா அங்கியுருவாயொளிர்
　　ரமணேசனை தியானித்திடுவோம்
ஆரா அமுதாம் நம்முயிர்க்குயிரான குரு
　　ரமணேசன் திருப்பாதம் பணிவோம்

நித்ய நிரஞ்சன நிராமய நிர்குண
　　ரமணேசனை தியானித்திடுவோம்
சுத்த நிர்மல தேஜோமயமான
　　ரமணேசன் திருப்பாதம் பணிவோம்

ஞானசிற்சக்தியான அத்வைத போதக
　　ரமணேசனை தியானித்திடுவோம்
ஞானானந்தப்பெரும் மோனப் பொருளான
　　ரமணேசன் திருப்பாதம் பணிவோம்

இதய குஹேசனை த்ரீகுணாதீத
　　ரமணேசனை தியானித்திடுவோம்
சதானந்த வாரிதியான நம்மான்ம
　　ரமணேசன் திருப்பாதம் பணிவோம்.

20. ஜகத்தீரே

ராகம்: பெஹாக் தாளம்: ஆதி

ஜகத்தீரே விரைந்தே வாரீரோ
ஜய குருபரனை நம்குரு ரமணனை
திருச்சுழித்தோன்றலை திருவருணை ஐயனை
தொழுதிடுவோமே, துதித்திடுவோமே
(ஜகத்தீரே)

ஜகமாயைதனை அழித்திடுவோனை
ஜகத்ஜோதியாய் அருணையில் ஒளிர்பவனை
தியானித்திடுவோம், ''நான் யார்'' என
ஆராய்ந்திடுவோமே
*தன்னையறிந்து தானாயமர்ந்து
திளைத்திடுவோம் திவ்யானுபவத்தில்
(ஜகத்தீரே)

*துரிதகாலம்



21. மலைமருந்து

ராகம்: அடாணா   தாளம்: ஆதி

மலைமருந்தென மாந்தர்தம் மாமருள்

மாய்த்திடுவோன் நம் மோனானந்த ரமணன்

அலையென அண்டிடும் அல்லலனைத்தும்
அழித்திடுவோன் அருள் ரமணன்

வலைபடு விலங்கென வருந்துவோர் தம்
வல்வினை வதைப்போன் வரகுரு ரமணன்

கலைமதியென தண்ணருளால் நம் தாபம்
களைந்திடுவோன் கருணை ரமணன்

தலையாய ''நான் யார்'' அஸ்திரம் தந்து
தன்னை அறியச்செய்வோன் நம் ரமணன்

உலையிடு பொன்னென நம் மையிருள் போக்கி
ஒளிர்விப்போன் ஒளிமய ரமணன்

விலையிலா ஆன்மச்சுடர் நம்முள் அவிர்வது
விளக்குவோன் ஞானகுரு ரமணன்

சிலையென நம்மை அசலமாயிருத்தி பேர்

அமைதியிலாழ்த்துவோன் அருணைமலை
ரமணன்.



22. ஞான மார்க்கத்துக்குகந்த குருபரன்

ராகமாலிகை (அடாணா, தோடி, ஹம்ஸாநந்தி, சிந்துபைரவி)

ராகம்: அடாணா தாளம்: ஆதி

ஞான மார்க்கத்துக்குகந்த குருபரன் நம் ரமணன்
மோனமொழியால் மாந்தரை உய்வித்த மாமுனிவன்
உன்னத உபதேசந்தனைக் கைபிடித்தே நாமவனை
என்றும் கைக்கூப்பிக் கும்பிட்டுப் போற்றிடுவோம் வாரீர்

ராகம்: தோடி

நானாரென ஆராய்ந்தறியென அறிவித்தோன் நம் ரமணன்
நானெனதெனும் அகந்தையழித்திடு என்ற ஞான தேசிகன்
நானெனலும், பொய்யுடலை மெய்யெனலும், பொய்யினும் பொய்யென்றோன்
நானென்பதழியா ஆன்மப்பொருளெனும் மெய்யினைப் போதித்தவன்

ராகம்: ஹம்ஸாநந்தி

சுகம் தேடியெங்குமோடித் திரியாதே என்றவன் நம்ரமணன்
சும்மாச்சமைந்து சிந்தை சிதைத்தலே சுகமென்ற சற்குருவவன்
சும்மா சுமைதனை நீ சுமந்திடுதல் வீணே, உந்தன்
சுமையைச் சுமக்க சுமைதாங்கி ஈசனுளன் என்ற தயாளன்

ராகம்: சிந்துபைரவி

தீராப்பிணியாம் ஜனனமரணம் மாய்ப்பவன் நம்
ரமணன்
தித்திக்கும் ஆனந்தத்தேனை நம்மிதயத்துப்பாய்ச்சும்
பரமானந்தன்
தேவாதிதேவரெலாம் ''ஜயஜய விஜய''
கோஷமுழங்கவே
திருவருணை வீற்றிருக்கும் ரமணன் பெருமை
எம்மால் பேசலாகுமோ?



23. பராபரக்கண்ணி

ராகம்: செஞ்சுருட்டி தாளம்: அடத்தாளம்

எந்தன் கருகிடும் ஆருயிர் பசும்பயிரெனச்
செழித்திடவே
நின்றன் அருட்பார்வை நீர் பாய்ச்சி பரிபாலிப்பாய்
ரமண பராபரமே

நான் எனதென்னும் எந்தன் செருக்கழித்து நின்
மோனானுபூதியளித்து
என் இதயத்தை நின் சந்நிதியாக்கிடாய்
ரமண பராபரமே

ஊனுடலே நானென நம்பி உடலோம்பி
வாணாளெல்லாம்
உண்டுடுத்தி வீணாக்கினேனுக்கு மெய்யறிவு புகட்டாய்
ரமண பராபரமே

ஆடிப்பாடி அங்குமிங்கும் ஓடி உலகியல்
வாய்ப்பட்டேன் – தலை
சூடாய் உன்கழல், சும்மாயிருந்து சுகிர்த்திடவே
ரமண பராபரமே

எந்தன் அஞ்ஞானப் பேரிருள்தனைப் போக்கி
மாமாயைதனை நீக்கி
எந்தன் சுயசொரூபம் துலங்கிட அருள்புரியாய்
ரமண பராபரமே

எப்போதும் நீயே கதியென நின் சரணே
கிடக்கப்பணித்தெனை
அப்பிலுப்பென உன்னில் என்னைக் கரைத்திடாய்
ரமண பராபரமே.



24. தூது விடல்

ராகம்: காம்போதி　　　　தாளம்: ரூபகம்

கருமுகிலே கடுகியே ஏகி நீ ரமணரிடம்
தூதுபோய்
கரும்பென உலகியல் வாய்ப்பட்டுழன்று மிக கசந்தே
போய் – ஓர்
கருவிழியாள் உன் அருளுக்கே கண்கலங்குகிறாள்
– கவலை களைந்து
கருணைமழை பொழிந்து காத்தருளாய் என்று
கூறாயோ?

வெண்ணிலவே மிக விரைந்தே நீ ரமணரிடம்
தூதுபோய்
மூண்டெழும் பேராசை மோகத்தால் மதிமயங்கி
– ஓர்
பெண் உன்னருளுக்கே பித்தேறி பிதற்றுகின்றாள்
– உந்தன்
கண்ணொளி பாய்ச்சி உயக்கொள்வாயென
விள்ளாயோ?

இளந்தென்றலே துரிதமாய் வீசி நீ ரமணரிடம்
தூதுபோய்
இடைவிடாமல் ஐம்புலக் கள்வர் கைப்பட்டு
நடுநடுங்கி – ஓர்
இளநங்கை உன்னருளுக்கே ஓலமிட்டழுகின்றாள்
– தயைபுரிந்து
இக்கணமே கள்வரை வீழ்த்தி அச்சம்
தவிர்ப்பாயென இயம்பாயோ?



பைங்கிளியே பஞ்செனப்பறந்து நீ ரமணரிடம்
தூதுபோய்
இங்குமங்கும் இன்பைத்தேடி ஓடி எங்கும்
துன்பேகண்டு – ஓர்
மங்கை உன்னருளுக்கே ஏங்குகின்றாள்;
உளங்கனிந்து – உந்தன்
தங்கக்கையால் அபயந்தந்தானந்தம்
நல்காயெனப் பேசாயோ?

பொன்வண்டே பரபரக்கப் பறந்தே நீ ரமணரிடம்
தூதுபோய்
பொன்னையும் புவியையுமே நம்பி நம்பி
மோசம் போய் – ஓர்
பேதை உன்னருளுக்கே புலம்புகின்றாள்;
மனமிரங்கி – உந்தன்
பொற்பாதம் அவள் சிரம் மேல் பதியாயோ
எனப்பகராயோ?

பட்டாம் பூச்சியே பட்டொளி வீசி நீ ரமணரிடம்
தூதுபோய்
பந்தபாசத்துட்பட்டு மனம்நொந்து வெந்து
புண்ணாகி – ஓர்
பெண்பிள்ளை உன்னருளுக்கே பரிதவிக்கின்றாள்
– பரிவுடன்
பற்றுமுற்றுமறுத்துப் பற்றுக்கோடாய்க்கா
என்று புகலாயோ?

மாடப்புறாவே பறந்தோடி நீ ரமணரிடம் தூதுபோய்
மாயையில் மூழ்கி மனமிகக்குழம்பி மீளும்
வழியறியாது – ஓர்
மாது உன்னருளுக்கே காத்துக்கிடக்கின்றாள்
– தாமதியாது
மாயையகற்றி மெய்யுணர்த்தி அமைதி
தாவென மொழியாயோ?

கானக்குயிலே குரலெடுத்திசைத்தே நீ ரமணரிடம்
தூதுபோய்
ஊனுடலே நானென எண்ணி ஏமாந்து
காரிருளில் சிக்கி – ஓர்
துன்பம் தோய் மடந்தை உன்னருளுக்கே
உருகுகின்றாள் – துயர்நீக்கி
இன்சொல் சொலி ஞானப்பாலூட்டி
ஆண்டருளெனப் பாடாயோ?

சிட்டுக்குருவியே சிட்டாய் பறந்து நீ ரமணரிடம்
தூதுபோய்
கட்டுண்டு நான் எனதென்னும் அகந்தை
மமதையால் – ஓர் அபலை
பட்டபாடெலாம் போதுமென உன்னருளுக்கே
அலறுகிறாள் – அகப்பேயோட்டி
சட்டெனக் கட்டவிழ்த்து மீட்டிடுவாய்
என்று செப்பாயோ?

கோத்தும்பீ காற்றெனப் பறந்து நீ ரமணரிடம்
தூதுபோய்
கோடானுகோடிப் பிறவிகள் எடுத்தெடுத்தே
அலுத்து – ஓர்
கோதை கரம்கூப்பி நாமம்பாடி உன்னருளுக்கே
கரைகின்றாள் – கருணையொடு
கோதில் கோவே, அவள் கைப்பற்றிக்
கரையேற்றிடாய் எனக் கூவாயோ?

25. திருவாரூரில் பிறந்திடிலே

ராகம்: மாண்டு தாளம்: ஆதி

திருவாரூரில் பிறந்திடிலே பிறவித்தளை அறுந்திடுமே
தில்லையைத் தரிசித்திட்டால் தீப்பிறவி தீய்ந்திடுமே
திருக்காசியில் காலமாயிடின் காலன் அணுகானே
இனியும்
திருவண்ணாமலையை எண்ணிடலே போதும்; உடன்
முக்தி நல்கிடுமே

திருவருணை செல்வோம் வாரீர்; ஸ்ரீ ரமணர் பாதம்
தொழுதிடுவோம்
அவரருளால் நம்மை அறிந்திடுவோம்; அவர் நம்மைக்
கரை சேர்த்திடுவாரே
மேகமென வந்துப்போவதுதான் நம் இன்பு துன்பு
யாவுமே
தேகம் மரித்தாலும், அழியாதது ஆன்மா
ஆகாயம் போல

அலைகள் எழும்பி வீழ்வது போன்றதே நம்
வாழ்வின் எழுச்சியும் வீழ்ச்சியும்
அலைகள் அடங்கிடுமே ஆழ்கடலில்; அமைதி
நிலைத்திடுமே ஆன்மாவில்
அவனியில் அனைவரும் நாடியலைவது அமைதியைத்
தேடியே அன்றோ? – நாம்
அருணை ரமணர் வழி நடந்திடுவோம்; அமைதி
அடைந்திடுவோமே.



26. ஆடு மயிலே

ராகம்: புன்னாகவராளி தாளம்: ஆதி

ஆடு மயிலே, ஞான மயிலே
ஆடு மயிலே, ரமணாஸ்ரம வாஸத்தாலே நான்
வீடு பேறு பெற்றேனென்று, ஆடு மயிலே

ஆடு மயிலே மகிழ்ந்தாடு மயிலே
ஆறு, குளம், காடு, மலையிலும் ரமணனைக்
கண்டேனென்று
ஆடு மயிலே, மகிழ்ந்தாடு மயிலே

காணக்காண கண்குளிர ஆடு மயிலே
காணும் காக்ஷியனைத்தும் ரமணனேயென
ஆடு மயிலே, மனங்குளிர ஆடு மயிலே

தோகைவிரித்தாடு மயிலே, ஆடு மயிலே
தோப்பு, துரவு, செடி, கொடி, மரமெலாம்
ரமணனே என
ஆடுமயிலே, தோகைவிரித்தாடு மயிலே

சுற்றிச் சுற்றி ஆடு மயிலே, ஆடு மயிலே
சுற்றுச் சூழலிலெங்கும் ரமணனைக் கண்டேனென்று
ஆடு மயிலே, சுற்றிச்சுற்றி ஆடு மயிலே

அங்குமிங்கும் சுழன்றாடு மயிலே, சுழன்றாடு மயிலே
அங்குமிங்குமெங்குமே உள்ளான் ரமணனென்று
ஆடு மயிலே, சுழன்று சுழன்று, ஆடு மயிலே

ஆனந்தமாய் ஆடு மயிலே, ஆனந்தமாய் ஆடு மயிலே
ஆனந்தமே நம் ஆன்ம ஸ்வரூபமென்று
ஆடு மயிலே, ஆனந்தமாய் ஆடு மயிலே

சுகமாய் ஆடு மயிலே, சுகமாய் ஆடு மயிலே
சுகமாயிருத்தலே நம் சொந்த சொரூபமென்று
ஆடு மயிலே, சுகமாய் ஆடு மயிலே

நடனமாடு மயிலே, நடனமாடு மயிலே
நாதன் ரமணனை எந்தன் உள்ளந்தனில் கண்டேனென
ஆடு மயிலே, நடனமாடு மயிலே

விளையாடு மயிலே, வளைந்து வளைந்தாடு மயிலே
வினையாவும் விலகிற்று ரமணனருளாலே என
ஆடு மயிலே, விளையாடு மயிலே

நீலமயிலே, நீ நேசமோடு ஆடு மயிலே
நீலகண்டன் ரமணனென்றே ஆடு மயிலே
ஆடு மயிலே, நேசமோடு ஆடு மயிலே

வண்ண வண்ணக் கோலம் காட்டி, ஆடு மயிலே – மயில்
வாகனன் குமரவடிவேலனும் அவனே என்று
ஆடு மயிலே, வண்ண, வண்ணக்கோலம் காட்டி, ஆடு மயிலே

ஆடு மயிலே, ஆனந்தக் களியாட்டம் ஆடு மயிலே
நாடும் ரமணன் நம் உள்ளும் வெளியும் உள்ளானே என்று
ஆடு மயிலே, ஆனந்தக்கூத்தாடு மயிலே



ஆடு மயிலே, மகிழ்ந்தாடு மயிலே
ஆடு மயிலே, கண்குளிர ஆடு மயிலே
ஆடு மயிலே, தோகைவிரித்தாடு மயிலே
ஆடு மயிலே, சுற்றிச் சுற்றி ஆடு மயிலே
ஆடு மயிலே, சுழன்று சுழன்று ஆடு மயிலே
ஆடு மயிலே, ஆனந்தக் கூத்தாடு மயிலே
ஆடு மயிலே, சுகமாய் ஆடு மயிலே
ஆடு மயிலே, நடனமாடு மயிலே
ஆடு மயிலே, விளையாடு மயிலே
ஆடு மயிலே, நேசமோடு ஆடு மயிலே
ஆடு மயிலே, வண்ணவண்ணக் கோலம் காட்டி,
ஆடு மயிலே
ஆடு மயிலே, ஆனந்தக்களியாட்டம் ஆடு மயிலே

ஆடு மயிலே, ஆடு மயிலே
ஆடு மயிலே, ஆடு மயிலே



27. கும்மி பாட்டு

ராகம்: ராகமாலிகை　　　　　　　　　　தாளம்: ஆதி

பல்லவி

ராகம்: ஹு'ஸேனி

கும்மியடிப்போம் பெண்காள் நாம் அனைவரும்
கூடியே – நம்
குருநாதரான ரமணேசன் புகழ்பாடியே　　　(கும்மி)

சரணங்கள்

அருணகிரியை வணங்கி வலம் வந்திடுமடியர்
அருணேசன் ஆசிதனை இறைஞ்சி இசைத்திடவே
அருணை ரமணர் கருணையோடருளிச் செய்தனரே
அருணாசல அக்ஷரமண மாலைதனை　　　(கும்மி)

ராகம்: யமுனா கல்யாணி

அருணாசல மகாத்மியம், நவமணிமாலை
அருணாசல பதிகம், அஷ்டகம், பஞ்ச ரத்னமெனும்
அரும்பெரும் நிதியாம் துதிகள் வழங்கி – ரமணர்
அருணமலையே ஜோதி சிவ ரூபமென உணர்த்தினரே
(கும்மி)

ராகம்: செஞ்சுருட்டி

நான் யாரெனும் ஆன்மவிசார மத்ததனாலே
ஞானக் கடல்தனைக் கடைந்தெடுத்தே ரமணர்
ஞாலமுய்ந்திடவே அளித்தனரே அமுதமாம்
ஞானரஸம் சொட்டும் உபதேச சாரம்தனை　　　(கும்மி)

ராகம்: புன்னாகவராளி

உலகியலில் மூழ்கி உண்டிச் சுவையிலே ஊறி
உழலும் நம்போல்வர்க்கும் தீரா ஆசை தீர
அல்லலொழிந்து ஆன்மலாபமுறவே – ரமணர்
அப்பளப்பாட்டாம் ஆன்மஞான
அப்பளமிட்டுத்தந்தனரே (கும்மி)

ராகம்: குந்தலவராளி

உள்ளதாம் உள்ளபொருளை உள்ளபடி விளக்கியே
உள்ளது நாற்பதெனும் ரமணோபநிஷதமாம்
உயர்நூலது அத்துவித சாத்திரமதை
உலகோர் உணர்ந்துய்யவே ஈந்தனரே – ரமணர்
(கும்மி)

ராகம்: சிந்துபைரவி

''ஐயா! பிரம்மவித்தையன்றோ வேதாந்தம்'' என்றே
அஞ்சி
ஐயமும் தயக்கமுமுற்றோர் வியந்து மகிழ்ந்திடவே
''ஐயே! அதிசுலபம் ஆன்மவித்தை'' எனவும் ரமணர்
ஐயமற அறிவித்தனரே, 'யாவர்க்குமுண்டு வீடு'
என்றே (கும்மி)



28. மாரமணன் வழி நடப்போம்

ராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி

மட்டிலாக் கருணையால் அவனியிலவதரித்த மாமுனி
ரமணன்
மானிடர் வாழும் முறையாதென வாழ்ந்து காட்டிய
மாதேவன்
மானிட தர்மம் தழைக்க முதற்கண் தாய்குலம்
மதித்தலெனவே
மாதாவுக்கு முக்தி தந்து மாத்ருபூதேஸ்வரராலயம்
எழுப்பினரே

மக்கள், மாக்கள், உயிரினம்யாவும் ஒன்றேயென
உணர்த்திடவே
மானுக்கும், மாட்டுக்கும், நாய்க்கும், காக்கைக்கும்
சமாதி வைத்தனரே
மயில், முயல், வானரம், அணில், நாகமும் அவர்தம்
அன்பராயினவே
மரம் வெட்டாதே, மலர் கிள்ளாதே; மரஞ்செடி
கொடிக்கும் வலிக்குமென்றனரே

மணியரிசி, சிறுதுரும்பும் வீணாக்கலாகாதென
கற்பித்தாரே
மருந்து, விருந்து, இனிப்பு, கூழாயினும் பகிர்ந்து
உண்டாரே
மன்னன், அந்தணன், வணிகன், இடையனும்
சமமவர் சந்நிதிதனிலே
மதம், சாதி, உயர்வு, தாழ்வேது? இருப்பது
நானொன்றேயன்றோ?

மணி, மணியாய் எழுதினரே; ஏதும், பயன்கருதாது
சீராய்ச் செய்தனரே
மலர்ந்த முகமும், மோனமுமாய் இயற்கையெழிலில்
இனிது வாழ்ந்தனரே
மானிடநெறி செல்லாது, மதிகெட்ட மாந்தராய்
மாய்ந்தழியும் நாம்
மதியினைப் பதியிற் பதித்து நலமாய் வாழ
வாழ்த்திட வேண்டுவமே

மனம் நசித்து, மரணம் வென்ற நம்சத்குரு ரமணன்
அருளிருக்க
மனிததேகமெடுத்தப் பயன் பெற்றுய்ந்திடுவோமவன்
பதமடைந்தே
மாநிலமெங்கணும் மனிதநேயம் பொங்கி மங்களம்
தங்கிடவே
மாரமணன் வழிநெறி கடைபிடிப்போம்; அமைதி
பரப்பிடுவோமே.



III. கீர்த்தனைகள்

29. ரமணா, ரமணா

ராகம்: தேஷ் | தாளம்: ஆதி

பல்லவி

ரமணா, ரமணா, என்றென்றும்
ரமணா என்றே சொல்வீரே (ரமணா)

அனுபல்லவி

ரமணா என்றாலே கவலைகள் பறந்திடுமே
யம பயமும் நசிந்து அமைதி நல்கிடுமே (ரமணா)

சரணம்

வாரீர், வாரீர் அனைவரும் வாரீர்
வான்புகழ் ரமணன், அகத்தொளிர் தேவன்
நாமுய்ந்திட அவதரித்த பராபரனவன்
நாமமே பாடி பரவசமடைவோமே (ரமணா)

30. தஞ்சமென்றே

ராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

தஞ்சமென்றே வந்தடைந்தேன் – உந்தன்
தாமரைத்தாள்; இனியும் தாமதியாது
தந்தருள்வாய் நான் வேண்டும் வரம் யாவும்
தருணம் இதுவே, தருணம் இதுவே – ரமணா

அனுபல்லவி

எண்ணிலா எண்ணமெண்ணும் மனத்தினை
மாய்த்திடுவாய்
விண்ணோரும் எய்தவொணா ஆனந்த நிலை
தந்தருளாய் (தஞ்சமென்றே)

சரணம்

பந்த தொந்தங்களனைத்தும் போக்கிடுவாய்
பாசாடவிக்குள் நான் புகாவண்ணம் காத்தருள்வாய்
பேசிப்பேசி ஓயாவீண் சழக்கிடல் ஓய்ந்திடச் செய்வாய்
பேசா முழு மோனநிலையில் நிலைத்திருக்க அருளாய்
(தஞ்சமென்றே)

அஞ்ஞான அந்தகாரந்தனை அகற்றிடுவாய் – மெய்ஞ்
ஞான ஆரொளிதனைக் கண்டறிந்திட அருளாய்
ஆக்கையே நானென்றுழன்றழுந்தும் மயல்தனை
மாய்த்திடுவாய்
ஆரும் கோரும் பேரின்ப வீடுதனை அருள்வாய்
(தஞ்சமென்றே)

31. நம்பியிரு நெஞ்சமே

ராகம்: திலங்கு　　　　　　　　　　　　　　　　தாளம்: ஆதி

பல்லவி

நம்பியிரு நெஞ்சமே நாளும் ஸ்ரீ ரமணனை – அவ்
உம்பர்கோன் ஒரு காலும் கைவிடாரே நம்மை
(நம்பியிரு)

அனுபல்லவி

நாகாபரணன் ரமணன் நம்மையாளும் குரு நாதன்
நாடுமடியார்க்கபயமருளும் சரணாலயமவன்
(நம்பியிரு)

சரணம்

சாவாவரம் பெறலாம், அவனிருதாள்
நாவால் வழுத்தேத்தி பூவாரம் படைத்திடில்
பாவாரம் புனைந்திட்டேன் அவன்பேரருளால்
உவந்ததையேற்றே காத்திடுவான் கருணைக் கடல்
ரமணன்
(நம்பியிரு)



32. அதிரமணீயமானது

ராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

அதிரமணீயமானது ஸ்ரீ ரமண நாமமே – நம்மை
அது அல்லும் பகலும் ஆன்மாவில் ரமிக்கச்
செய்திடுமே
(அதி)

அனுபல்லவி

அகந்தை மமதைதனை அறவே அழித்திடுமே
அகத்தில் ''அஹமஹம்'' ஸ்புரணம் தனை
உணர்த்திடுமே
(அதி)

சரணம்

அஞ்ஞான இருள்தனை நீக்கி ஞான ஒளி ஈந்திடுமே
அஞ்சேலென அபயமளித்து அச்சம் அகற்றிடுமே
அன்பினாலாண்டு பேரானந்தத்தில் ஆழ்த்திடுமே
அகத்தொளிர் இருப்போடொன்றிணைத்து
பிறப்பிறப்பறுத்திடுமே
(அதி)



33. ஸதா நின்னையே

ராகம்: சிவரஞ்சனி   தாளம்: ரூபகம்

பல்லவி

ஸதா நின்னையே ஸ்மரித்திட அருளாய் அருணை
வேங்கடவா
ஸதாசிவா, ஸர்வேஸா, ஸதானந்த ரமணா
(ஸதா)

அனுபல்லவி

ஸதா எண்ணிலா எண்ணங்கள் வந்து சூழுதே,
மனமது சுழலுதே
ஸத்குருஸ்மரணமொன்றே சிதைத்திடும் எண்ண
அலைகள்தனை
(ஸதா)

சரணம்

சாந்தமது தந்தெந்தன் வாழ்வு செழித்திடச்
செய்திடாய்
சாவதும் பிறப்புமிலா அழியா இருப்பதனை
உணர்த்திடாய்
சத்தான ஆன்மஸ்திதியில் நிலைத்திட அருள்
புரிவாயே
சத்சிதானந்தத்தில் திளைத்து பவக்கடல் கடந்திடவே
(ஸதா)



34. என்னை நீ

ராகம்: நவரஸகானடா	தாளம்: ஆதி

பல்லவி

என்னை நீ உதாசீனம் செய்தல் சரியா – ரமணா
எண்ணில் நாளாய் நின்னையே நினைந்துருகும் ஏழை
(என்னை)

அனுபல்லவி

கன்றென கதறுவோர்க்கு பசுவாகி அருள் சுரக்கும்
என்றன் குருவே, என் கூக்குரல் கேட்டும் கேளாதது
போல்
(என்னை)

சரணம்

உன்னைப்பணிவோர் வினை பொசுக்கிடும் ஞானப்
பரிதியே
என்றன் அஞ்ஞான அழுக்காறனைத்தும் அறவே
அகற்றிடாயோ?
உன்றன் திருசந்நிதியன்றி வேறு தாயகம்
எனக்கிலையே
உன்றன் சீர் அடியார் சபையில் என்னையும்
சேர்த்திடலாகாதா?
(என்னை)



35. எந்நேரமும்

ராகம்: ஜோன்புரி　　　　　　　　　　　　தாளம்: ஆதி

பல்லவி

எந்நேரமும் உந்தன் பாதாரவிந்தமே அன்றி
எந்தனுக்கு வேறு கதியேது ரமண தேவே
(எந்நேரமும்)

அனுபல்லவி

முந்தைப் பிறவிகளில் யாது தவம் செய்தேனோ - நான்
இந்தப் பிறவிதனில் உந்தனை தரிசிக்கும் பேறு
பெற்றேனே
(எந்நேரமும்)

சரணம்

துன்பிலே உழன்று மலத்திலே மிதந்திடும் சிசுவென
நான் இனியும் இருள்சூழ் கருவறை நரகில் வீழாது
இன்புறு நிலையாம் போக்கும் வரவுமிலாப் – பேர்
ஆனந்த வீடெய்தி உய்ந்திட அருள்புரிந்திடுவாயே
(எந்நேரமும்)



36. எந்தன் மனம்

ராகம்: தோடி | தாளம்: ஆதி

பல்லவி

எந்தன் மனம் பேயாய் சுழன்று சுழன்றாடுதே
– ரமணா
நீ யாதும் செய்யாது சும்மாயிருத்தல் முறையோ?
(எந்தன்)

அனுபல்லவி

உந்தனுக்கும் எந்தனுக்கும் இடையே எழும்
மனமதை மாய்த்திடாயோ?
உடலே நானென்றுழலும் மாயைதனை
அழித்திடாயோ?
(எந்தன்)

சரணம்

மாயா பிறவிக்கடலில் மூழ்கி, மூழ்கித்
தவிக்கவிடலாகுமோ?
சேயாய்ப் பிறந்து, பிறந்திளைத்துப் பிணி, மூப்பு,
இறப்பு என
ஓயாது மாறி மாறி ஓடும் இப்பிறவித்தேரை
தயாளா! நிலைசேர்த்து, நான் உனை அடைந்திட
அருளாயோ?
(எந்தன்)



37. தன்னை அறிந்து

ராகம்: கமாஸ் தாளம்: ஆதி

பல்லவி

தன்னை அறிந்தின்புற்றிருக்க (ரமணா) உந்தன்
அருள்தனை
தந்தருள வேண்டுவனே உந்தன் அடிமை நானே
(தன்னை)

அனுபல்லவி

தன்னை அறிந்திடில் பின்வேறென்ன உளதறிய
தன்னை அறிதலே பரமனை அறிதலாம் எனப்
பகர்ந்தனையே
(தன்னை)

சரணம்

நானெனும் அகந்தை அழிந்தால் தான் தானாகலாம்
நான் யாரென உள்ளாழ்ந்தாராய்ந்திடு மனிதா
''நான்'' என்பது உடல், மனம், புத்தி ஏதுமில்லையே
''நான்'' என்பது தானான ஆன்மா, அழியாத-
தொன்றென்றனையே
தானானத்தன்னை உணர்ந்திடலே முக்தி எனவும்
மொழிந்தனையே
தன்னைத்தானே அறிந்த தன்மயமான ரமணா, நீ
(தன்னை)



38. அண்ணாமலையானே

ராகம்: நாதநாமக்கிரியை | தாளம்: திரிபுடை (கண்டஜாதி)

பல்லவி

*அண்ணாமலையானே உந்தன் அருள்வேண்டி தினம்
தினம்
பண்ணொடு பாடி, பாடு பட்டுழைத்திடுவோம்
தந்திடாயோ உந்தன் ஆசிதனை?
(அண்ணாமலையானே)*

அனுபல்லவி

*பண்டொருகால் உந்தன் அழலுரு கண்டு தேவர்
அஞ்சித் தொழ
கண்கொளாகாட்சியாய் ரத்னமலை, கனகமலை
உருகொண்டாய்
எண்ணிடவே வீடருளும் அண்ணாமலையப்பா –
கலியினிலே
தண்ணளி சொரியும் பசுஞ்சோலை மேனி
பூண்டுளங்குளிர நின்றாய்
(அண்ணாமலையானே)*

சரணம்

தண்ணீர் தடாகமும், நீர் அருவியும், அடர்கானகமும்
போர்த்து அன்று
மண்ணோரும் விண்ணோரும் மகிழ விலங்கினமும்,
புள்ளினமும் களிக்க
மண்ணிலே விண்ணெனவே வியக்க ஞானதபோதனர்
தழைக்க (அன்று) – இன்று நாம்
பண்ணியபாபமோ, ஏனோ, பசுமையும், நீரும் வற்றி
நீ வாடுவதேனோ?
(அண்ணாமலையானே)

எண்ணிலடியர் முழு நிலவு உமைச்சுற்றி தம்மையே
மாலையாய் சூட்டுகிறாரே
எண்ணில் தீங்கிழைத்திடினும் எமைத்திருத்தி நல்வழி
உணர்த்திடுவாயே
மீண்டும் வனம் வளர, மழைபொழிய, எழில் சூழ
வாழ்வு செழிக்கச் செய்வாயே
உண்ணாமுலையொடு கொலுவிருப்போய்
உமைவலம் வரும் எமைக்காத்தருளாயே
(அண்ணாமலையானே)



39. நீ நினைத்தால்

ராகம்: தர்பாரி கானடா

தாளம்: ஜம்பை
(10 அக்ஷரம்)

பல்லவி

நீ நினைத்தாலாகாததுமுண்டோ ஸ்ரீ ரமணா
நீலகண்டனன்றோ, நஞ்சுமமுதாய் உண்டவனன்றோ?
(நீ நினைத்தால்)

அனுபல்லவி

நீயே கதியென நினையே நம்புமேழை நெஞ்சம்
நோகலாகுமோ?
நின் நீள்விழியால் அருள் நீர் பாய்ச்சி பேரின்பம்
நல்காததேனோ?
(நீ நினைத்தால்)

சரணம்

எள்ளும் எண்ணெய்க்குதவும்; கொள்ளும் குதிரைக்-
குணவாகுமே
புல்லும் பசு சுவைக்கும்; பூண்டும் நோய்க்கு
மருந்தாகுமே
கல்லும் சிலையாகும்; என்னாலாவதொன்றுமில்லையே
பொல்லா இப்பகடியைப் படைத்த நீ எனைப்
புசித்தல் உன் பொறுப்பன்றோ?
(நீ நினைத்தால்)

40. உள்ளமெனும்

ராகம்: சாமா   தாளம்: திரிபுடை (கண்டஜாதி)

பல்லவி

உள்ளமெனும் கடல் கொந்தளிக்குதே - ரமணா
உள்ளே சென்று தன்னை உணர தண்ணருள்
தந்திடாயோ?
(உள்ளமெனும்)

அனுபல்லவி

உருளும் பந்தென உளம் உள்ளும் புறமும்
உருண்டோடுதே
உருவற்ற மனப்பேய் எனை உலுக்கிக் குலுக்கி
ஆட்டுதே
சுழற்றிவிட்ட பம்பரமாய் எண்ணங்கள் சுற்றிச்சுற்றி
போராடுதே
சுழலும் சக்கரமாம் பிறப்பும், இறப்பும் எனைச்
சூழாதருள்வாயே
(உள்ளமெனும்)

சரணம்

பட்டமரமும் துளிர்க்கும், கெட்டக்குடியும் செழிக்கும்
- ரமணா
தொட்டதெலாம் பொன்னாகும் உந்தன் பொற்கரம்
பட்டாலே
வெட்ட வெளியும் அடர் வனமாகிடுமே - ரமணா
வற்றிய ஓடையும் ஜீவநதியாகிடும் உன்னருட்கண்
நோக்கால்
(உள்ளமெனும்)

பாலை மணலும் பசுஞ்சோலையாகிடுமே – ரமணா
கல்லும் குன்றாகிடும் நீ நினைத்த அக்கணத்திலே
கட்டும் விடுபடும்; வீடும் கிட்டும் உன் விழிவீச்சால்
என்றறிந்தே
பட்டதெலாம் போதுமென உனை சரணடைந்தேன்,
காத்தருள்வாய்
(உள்ளமெனும்)



41. தேடித்தேடி

ராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஐம்பை (10 அக்ஷரம்)

பல்லவி

தேடித்தேடி எங்கும் அலைவதேனோ நாம்
– எதனைத்
தேடியலைகின்றோம் என்றே சற்றும் சிந்தித்திடாமலே
(தேடித்தேடி)

அனுபல்லவி

தேடியதுதான் கிட்டியதோ? தேடியப்பயன் தான்
பெற்றோமோ?
தேடித்தேடி தட்டுத்தடுமாறி தடம் தப்பி
தவிப்பதேனோ?
(தேடித்தேடி)

சரணம்

இடையிலுடுத்தியே அவ்வாடையைக் கொடியில்
தேடல் நகைப்புக்கிடமாம்
இடருற்றின்புக்காய் அலையுமெமை எள்ளி
ஒதுக்கிடப் பாரேல்
திடமுற உனையேப்பற்றி உள்ளாழ்ந்தாராய்ந்தறிந்து
தேடிடும் திருவருள் நிதி எம்முள்
ஒளிர்வதுணர்த்திடாயோ?
திண்டாடித் திகைத்ததெலாம் தீர்ந்திட அழித்திடாய்
எமதாணவந்தனை
தத்துவமிதுதானென்றெமைத்தேற்றி ஆனந்தானுபவம்
அருளாயோ
(தேடித்தேடி)

42. எந்தன் பிறவிக்கடலை

ராகம்: சுபபந்துவராளி   தாளம்: ஆதி

பல்லவி

எந்தன் பிறவிக்கடலைக் கடந்திடவே – ரமணா
உந்தன் பூங்கழல் புகலன்றி வேறு கதியேதய்யா?
(எந்தன்)

அனுபல்லவி

எந்நேரமும் ரமணா உனை நினைந்து நினைந்துருகிடில்
என்னகத்தே சுமைந்திடுமே சதானந்த சாந்தி நிலை
(எந்தன்)

சரணம்

அந்தமும் ஆதியுமில்லா சுந்தர ஞானச் சுடர் ரமணா
தொந்த பந்தமொழிந்து ஏகாந்தத்தில் திளைத்திருந்து
உந்தன் தாமரை நாள்தனை தினம் தினம் தொழுதேத்தி
இந்த நாயினும் கடையேனும் உய்வுற அருளாயோ?
(எந்தன்)



43. பற்று முற்றும்

ராகம்: முகாரி
தாளம்: ஆதி

பல்லவி

பற்று முற்றும் அறுத்திடாயோ இவ்வுலகப்
பற்று முற்றும் அறுத்திடாயோ, ரமணா உன்றன்
பொற்பாதமே பற்றி போற்றிப் பணிந்திடவே
(பற்று)

அனுபல்லவி

பற்றெனும் சேற்றிற் சிக்கிப் பரிதவிக்கும் இப்
பேதையை மீட்டு
பற்றுக்கோடாய்க்காத்து அபயம் தந்தருள் புரிவாயே
(பற்று)

சரணம்

பற்றிய பற்றெலாம் பிரிந்து பறந்திடவே - ரமணா
பாய்ச்சிடாய் உன்றன் பேரொளிப்பார்வை என்றன்
மீதிலே
பறித்திடாய் என்றன் பாழகந்தைப் பேய்தனையே
புசித்திடுவாய் பரமா எனை, பக்குவமாக்கி நீயே
(பற்று)



44. அவனையே நம்பி

ராகம்: பெஹாக் தாளம்: ஆதி

பல்லவி

அவனையே நம்பி நானிருக்க எனக்கருள்புரிய ரமணன்
அவனிருக்கும் போது எனக்கேது குறை கூறாய்
– தோழி
(அவனையே)

அனுபல்லவி

அவனிச்சைப்படியெலாம் அவனென்னை ஆட்டிட
அதனை உவந்து ஏற்றே நானும் ஆடிடவும்
அவனருளாலே அச்சமகன்று அமைதி அடைந்தேன்
அவனன்றி நானில்லையெனும் உண்மை
உணர்ந்தேனடி – தோழி
(அவனையே)

சரணம்

அடியேன் அவன் அடிமையன்றோ நான்
அவன் உடைமையன்றோ எந்நாளும்
அருள் உருவான ரமணகுருபரன் என்துணையிருக்க
அஞ்ஞான இருள் என்னைச் சூழுமோ இனியும்
– தோழி
(அவனையே)



45. மனிதா அறிந்துகொள்

ராகம்: மலையமாருதம் தாளம்: ஆதி

பல்லவி

மனிதா அறிந்துகொள் அவனிதனில் அரிது அரிது
மானிட பிறவியடைதல் அதை வீணாக்கலாகுமோ?
(மனிதா)

அனுபல்லவி

மதியுடை மாந்தர் மாயையில் மயங்காது
பதிரமணன் பதமலர்தனைப் பற்றி
மதியை நொடியும் விடாது பதியில் பதித்து
விதியை வென்று பதிநிலை எய்திடுவாரே
(மனிதா)

சரணம்

தனதடியர் உய்யவே உதித்த ரமணரைத்துதித்து
தனியே தோன்றி தனியே மறையும் மனிதா நீ
தனித்திருந்து தொந்தம் தொலைந்து தன்னை
ஆராய்ந்தறிந்து
தன்னிலே தானாயமர்ந்து பிறவித்தளை
தகர்த்திடுவாயே
(மனிதா)



46. உனதருள்

ராகம்: நளினகாந்தி தாளம்: ஆதி.

பல்லவி

உனதருள் என்னென்று சொல்வேன் – ரமணா
உனதன்பர்க்கு எந்நேரமும் அள்ளி அள்ளிப்புகட்டிடும்
(உனதருள்)

அனுபல்லவி

அந்தராத்மாவே ''நான்'', அதுவே நித்யம்
அது ஆனந்தஸ்வரூபமென விளக்கிய
(உனதருள்)

சரணம்

எதுவும் தொடுமோ ஆன்மாவை இன்புதுன்பெல்லாம்
எது நேரிடினும் உடலுக்கே அதுவாம்
பாதித்திடுமோ பிம்பங்கள் (ஸ்)படிகம்தனை?
பரமான்மாவை அறிந்திடில் பவக்கடல் வீழ்வேது?
(உனதருள்)



47. ஒன்றே உண்டு

ராகம்: பீலு　　　　　　　　　　　　　　　　தாளம்: ஆதி

பல்லவி

ஒன்றே உண்டு; அது என்றும் உண்டு; எங்கும் உண்டு
　　　　　　　　　　　　　　　　　　　　　- அது
ஒன்றே உலகனைத்திலும் ஊடுருவி ஆட்டுவிக்கும்
　　　　　　　　　　　　　　　　　　　　　ஒன்று
　　　　　　　　　　　　　　　　　　　　(ஒன்றே)

அனுபல்லவி

ஓங்கார ஸ்வரூபமே ஓதும் வேதஸாரமே
ஒப்பிலாப்பொருளே பரமான்ம ஒளியே - ரமணா
ஓடமென்னை ஓட்டிடுவாய் உந்தன் இச்சைப்படியே
ஓடுமோ ஓடம் நீ யன்றி; ஒருபோதும் ஓடாதென்-
　　　　　　　　　　　　　　　　　　　றறிந்தேனே
　　　　　　　　　　　　　　　　　　　　(ஒன்றே)

சரணம்

ஒவ்வொரு கணமும் என்னுள்ளிருந்தே எனை நீ
　　　　　　　　　　　　　　　　　　　இயக்குவிக்க
ஒரு நாளும் உனை நினையாது எலாமென்-
　　　　　　　　　　　　　　　செயலெனும் செருக்காலே
ஓடியாடித்திரிந்தே உடல் சோர்ந்தே உளம் நொந்துனை
　　　　　　　　　　　　　　　　　　　அடைந்தேனே
ஓடும் மனம் ஓய்ந்திடவே உணர்ந்தேன் இன்று
　　　　　　　　　　　　　　　　　　　உன்னருளாலே
　　　　　　　　　　　　　　　　　　　　(ஒன்றே)

48. நீயே குருவாவாய்

ராகம்: யதுகுலகாம்போதி தாளம்: ஆதி

பல்லவி

நீயே குருவாவாய் நீயே தெய்வமுமாவாய் – ரமணா
நீயே எம்முள்ளொளிரும் ஆன்மஸ்வரூபமாவாய்
(நீயே)

அனுபல்லவி

நீயே எம்மை ஆட்டிப்படைக்கும் சிற்சக்தியாவாய்
நீயே எம்மைச் சும்மாயிருக்கப் பணிக்கும்
சிவனுமாவாய்
(நீயே)

சரணம்

நீயே உள்ளும், வெளியும், ஒளியும், ஒலியுமாவாய்
நீயே மண்ணும், விண்ணும், தீ, வளி, நீருமாவாய்
நீயே முக்காலமும், நேரமும், அகாலமுமாவாய்
நீயே எலாம்; நீயன்றியொன்றிலையென உணர்த்திய
பூரணனே
(நீயே)



49. கருணையே உருவாய்

ராகம்: அமீர்கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

கருணையே உருவாய் அவதரித்த அருவமே,
ரமணா – நீ
உருவிட்டொளிவீசி அருணையில் ஒன்றி நிகழ்த்தினை
ஓரற்புதமே
(கருணையே)

அனுபல்லவி

திருவுரு களைந்திடுமுன் இயம்பினையே அடியரிடம்
– ரமணா
இருக்கிறேன் என்றுமிங்கே, செல்வதெங்குமிலை
என்றே
(கருணையே)

சரணம்

ஒரு கணமேனும் இடையராது ஜ்வலித்திடும்
கதிரவன்
ஓர்போதோர்திசை உதித்து ஒழிந்தனன் எனல் சரியோ?
திருச்சுழிதனில் ஓர்தினம் உதித்தனன் ஞானசூரிய
ரமணன்
திருவருணையில் மறைந்தனன் ஓர் நாள் எனலும்
மெய்யாமோ?
ஓரிமைப்போதும்விடாது நமைக்காக்கும்
அருவுருவாம் ரமணன்
திருவருள் நினைந்து தனையறிந்து பேரானந்த
முறுவோமே
(கருணையே)

50. ஐயா ரமணா

ராகம்: சௌராஷ்ட்ரம் தாளம்: ஆதி

பல்லவி

ஐயா ரமணா உன்னிலும் எளியோனும் – இவ்
வையகமதனிலே இருந்ததுமுண்டோ?
(ஐயா)

அனுபல்லவி

ஐயனே நீ உடுத்திய உடைதான் என்னே?
ஐயா நீ உண்ட உணவும் இருந்த இடமும் தான்
என்னே?
(ஐயா)

சரணம்

உந்தன் திருக்கரங்களையே கலனாய்க் கொண்டு
ஈந்த உணவை உண்டுடனே சமாதியி-
லாழ்ந்திட்டனையே
இன்று எண்ணிலடியர் அறுசுவை உண்டி புசித்து
மகிழவே
அன்று பதினாறு வயதினில் நீ யாசித்துண்டனையோ?
(ஐயா)

காட்டிலும், மேட்டிலும் நடந்தனையே ஐயா
கல்லும், முள்ளும் குத்தி திருப்பாதங்களில் உதிரம்
கசிந்ததோ?
விலங்கும், பாம்பும், தேளும் நீ
யாரென்றறிந்தனவோ?
வெயில், குளிர், மழை, காற்றும் உம்மைப்
போற்றிப் பணிந்தனவோ?
(ஐயா)

குகைவாசம் தான் மிக சுகமாய் அமைந்ததோ – ஐயா
உந்தன் உள்ளொளியால் காரிருளும் அகன்றோடியதோ?
கோவணாண்டியாய் காட்சியளித்த ஐயா – நீ
கோடீஸ்வரன் எனுமுண்மை உலகிற்கு
உணர்த்திட்டாயே
(ஐயா)

பிச்சாண்டி வேடம் தரித்த சிவனார் நீயன்றோ?
இச்சகத்தோர் உய்ந்திட நீ பூண்ட கடுந்தவக்கோலம்
எம்மை நெகிழ்விக்குதய்யா; கைம்மாறொன்றறியோம்
எம்மை உந்தன் சரண் ஸமர்ப்பிக்கிறோம்;
ஏற்றருளுமய்யா
(ஐயா)



51. ரமணா என்னும் மூன்றெழுத்து

ராகம்: மத்யமாவதி தாளம்: ஆதி

பல்லவி

ரமணா என்னும் மூன்றெழுத்து – பேர்
அழகன் முக்கண்ணன் தானம்மா
அழகு எனும் மூன்றெழுத்து அம்மையவள்
அகிலமுய்ய உவந்தீந்த அரனே தானம்மா
(ரமணா)

அனுபல்லவி

ரமணா என்றுருகி அழைத்தால் நம் கண்முன் நிற்பான்
நம் மனத்துயர் துடைத்து ஆனந்தம் அருளுவான்
(ரமணா)

சரணம்

அன்னையினும் மிக்க அன்புருவாம் சற்குரு ரமணன்
அன்பர்தமை அனவரதம் ஆண்டருளும் அப்பனவன்
உன்னத வாழ்வதனை வாழ்ந்தே காட்டிய ஞானியவன்
அன்னவன் கழல்பற்றி ரமணீய நிலை பெறுவோமே
(ரமணா)



REVIEWS OF THE AUTHOR'S FIRST BOOK "SRI RAMANA PAAMAALAI"

THE HINDU, Tuesday, May 21st, 1996

The dedication of a disciple or an admirer of one's mentor and guide may be in different ways.One of them, in the form of a garland of songs praising one's Guru, has been adopted by the composer in this book. In 71 songs set in different ragas, she extols the qualities and grace of her Guru. Smt. Mahalakshmi Suryanandan who was in the very presence of Sri Ramana Maharshi has received good training in classical music. Her devotional outpouring through these simple and lilting songs reveal her expertise in stringing the contents of each one of them in an excellent manner. The songs should be popularised with the help of professionals and also rendered in congregational worship.

* * *

ரமண ஒளி, டிஸம்பர் 1996

சீரிய காந்தியவாதியும், உயர்ந்த இரமண பக்தருமான தெய்வத்திரு K. சுவாமிநாதன் அவர்களின் மூத்த புதல்வி திருமதி சூர்யாநந்தன், யாரும் எளிதில் பக்தியுடன் பாடவல்ல 71 அற்புதமான பாடல்களை இராக, தாளத்துடன் இசைத்து பாமாலையாக சூட்டி, தனது படைப்பை நன்றிக் கடனாக தன் பெற்றோர்களுக்கு காணிக்கை செலுத்தியுள்ளார்கள். திரு. சுவாமிநாதன் அவர்களுடன் தனது இளமைக் காலம் தொட்டு இரமணாஸ்ரமம் அடிக்கடி சென்று வந்து பகவானிடமும், அவரது அடியார்களிடமும் அவர் பெற்ற அனுபவங்களை, உபதேசங்களை பாடல்களாக பதிவு செய்த பெருமை மாஹி என்ற மகாலக்ஷ்மி போன்ற

அன்பர்களால்தான் இத்துணை உண்மை செய்திகளை பாடல் வழியாக வெளிக்கொணர முடிந்தது. கவிஞன் எதையும் பாடலாம், எந்த நிகழ்வுகளையும் விளக்கிக் கூறலாம். ஆனால் மகாலக்ஷ்மி போன்ற உள்ளார்ந்த இரமண பக்தர்கள் பகவானிடம் அவர்களுக்கு கிடைத்த சந்நிதி வாசத்தின் மேன்மையே தன்னுடைய பாடல்களை இயல்பாக, இனிமையாக, எளிமையாக நல்ல தமிழில் எழுத முடிந்தது. இருபது ரூபாய்க்கு, 91 பக்கங்களில் பக்கத்திற்கு பக்கம் கண்ணைக் கவரும் இரமணரது அழகான பாடல்கள், சித்திரங்கள், நல்ல முறையில் அச்சு செய்யப்பட்டு வெளிவந்திருக்கிறது. இரமண பக்தர்கள் வீடுதோரும் பாடிப் பரவசமடைய வேண்டிய சிறப்பு பாமாலை இந்த நூல்.

சு. குருசாமி
தலைவர், இரமணகேந்திரம்,
மதுரை



REVIEWS OF THE AUTHOR'S "RAMANA POTRI - RAMANA, GLORY BE TO YOU"

THE HINDU, Tuesday, March 2, 1999

This pleasingly-produced bilingual publication is a collection of inspired hymns hailing Sri Ramana Maharshi and projecting his philosophy in meaningful lyrics, composed by his ardent devotee, Mahalakshmi Suryanandan, who had the privilege of obtaining the sage's grace even from her childhood as she frequented Ramanashramam with her father, late K. Swaminathan, the great Gandhian scholar and an excellent exponent of Ramana's philosophy. The pages are elegantly ornamented with striking sketches drawn by artist Padmavasan.

Ramana lived from 1896 till the night of April 14, 1950, near the Arunachala hill in Tiruvannamalai, teaching the sublimest truths in the simplest language and a spiritual technique of Self-enquiry – safe to handle, infallible in result and open to all irrespective of caste or religion. As agreeably mentioned by Mr. C.V. Narasimhan, in his foreword, the songs (108 in all, including 71 carried in an earlier work titled *Sri Ramana Paamaalai* phrased in exquisite poetic Tamil), beautifully delineate the path of inquiry into the Self which the sage pointed out to all devotees and also touch upon the salient events in his life. Many stanzas stand out for the depth of meaning and the core philosophy. For example:

Nothing is born
Nothing dies.
The One that exists
Lives forever
So, why worry?
You said. "Discover Who am I?"
When the ego arises all else arises.

When the ego is not
all else is not
This great truth you taught us, Ramana!

One of the verses tells the story of Ramana succinctly in lilting simple lines couched in 27 stanzas meant for children (of all ages!), and set in the tune of the Bhaja Govindam.

With her firm grounding in Carnatic music, almost all the songs are attuned to different classical ragas and set to varied beats as indicated alongside the Tamil titles. A few folky tunes like "Kaavadi Chindu" and "Kilikkanni" also find a place.

The rendering of these Tamil songs by competent singers would enthral music audiences besides Ramana devotees, while the verses in English would help the non-Tamils to imbibe the spirit of each song.

ரமணா போற்றி

(நூல் மதிப்புரை)

ரமண ஒளி, ஜுலை 1999

ஸத்குருவின் அருட்பேற்றினை நினைந்து போற்றுவது என்பது அருளனுபவம் பெற்றோர் செய்கையாகும். அந்தவகையில் ஸ்ரீ பகவானை 1941-ஆம் ஆண்டு தரிசித்து பிறகு 1950 வரை பலமுறை திருவருணையில் தங்கியிருந்து ஸ்ரீ ரமணரின் அருளுக்கு ஆட்பட்டவர் திருமதி மஹாலக்ஷ்மி சூர்யாநந்தன் அவர்கள். பேராசிரியர் சுவாமிநாதனின் மூத்த புதல்வியான இவர் 1992-ஆம் ஆண்டு முதல் தமது முயற்சியின்றியே அருட் குருநாதர் மீது அற்புதமான பாடல்களை பாடத் தொடங்கினார்.

''ஸ்ரீ ரமண பாமாலை'' என்ற நூல் வடிவில் இவரது பாடல் தொகுப்பு 1995-ஆம் ஆண்டு டில்லி ரமண

கேந்திரத்தினரால் வெளியிடப்பட்டது. பின்னர் ''ரமணா போற்றி'' என்ற பாடல் தொகுப்பு நூல் டில்லி ரமண கேந்திரத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

''ஸ்ரீ ரமண சரிதம்'' என்ற தலைப்பில் பகவானது வரலாற்றினை மிக எளிமையாகவும் அருமையாகவும் பாடியமை இவரது கவிதை நயத்திற்குச் சான்று. 'எந்த நேரமும் அவனையே சிந்தை செய்திடில் வெந்தழலிடு வெண்ணெயென நம் வல்வினை முற்றும் மாய்ந்திடுமே' என 'வந்தான் கதிரவனென்' என்ற பாடல் வரிகள் அவருக்கு இருக்கும் பக்தியின் திடத்தினைப் பறைசாற்றுகிறது.

நூலாசிரியருக்கு ஸ்ரீ ரமண பகவான்மீது இருக்கும் அளவற்ற நம்பிக்கையும் பக்தியினையும் நூல்முழுமைக்கும் காணக் கிடக்கிறது.

அண்டபிண்ட சராசரமெலாம் நீயல்லவோ –
உந்தனை
அண்டிய என்னை மறுபிறவி பற்றுமோ?

என 'எங்கும் நிறைந்தோன்' பாடல் மூலம் தெளிவு படுத்துகிறார்.

'ஓயாது ஒழியாது உழற்றிடும் எந்தன்
மனப் பேய் தனை
ஓட்டிடாயோ உந்தன் திருக்கரக் கோலோச்சியே''

என்ற அவரின் பாடல் வரிகள் உண்மையான சாதகனின் உயர்ந்த உள்ளக் கிடக்கை அறிவிக்கின்றது. மனமாயை பேயினை ஓட்டும் வல்லமை சத்குருவுக்குதான் உண்டு என்பதை உணர்ந்து பாடுவதைக் காணமுடிகிறது.

எளியபதம், அரிய கருத்துக்கள், தூய பக்தி இவை நூல் முழுவதும் ஊடுருவி நிற்கின்றது. பத்மவாஸனின் பாடலுக்குப் பொருத்தமான அழகான ஓவியங்கள், நம்மை மகிழ்வுறச் செய்கின்றன. 37 இனிய

தமிழ்ப்பாக்களும் அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்புடன் திகழும் இந்நூல் இராக தாளத்தின் குறிப்புகளுடன் அருமையான அச்சில் கிடைக்கப் பெறுவது ரமணபக்தர்களுக்கு ஓர் அருள் விருந்தாகும். இந்நூல் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமம் மற்றும் மதுரை ரமணமந்திரத்திலும் கிடைக்கும்.

– எ. கொண்டல் ராஜ்



ॐ

Un-published songs.

1) ஹிந்தோளம் : ஆதி

பல்லவி

சோதனை மேலும் வேங்கடனே, தயை
செய்திடாயோ - எந்தன்
வினையாவும் உந்தன் விழிவீச்சால்
நீறாக்கிடாயோ?
(சோதனை)

அநுபல்லவி

வேதனை புரியாது உள்ளொளி பெருக்கி
உந்தன் திவ்ய
பதமலர் தந்தெனைக் காத்தருள்வாயோ?
(சோதனை)

சரணம்

எந்தன் பந்த தொந்த ஆசாபாச பற்றனைத்-
தையும்
உந்தன் அருள் வாளால் வெட்டி
மாய்த்திடாயோ
நான், எனதெனும் இரண்டொழிய
உந்தன் ஞானக்கண் திறவாயோ?
நானொழிந்து உன்னியல்பாகவே
ஆயிட அருள்வாயோ?

(composed on புனர்வசு day on
31/5/2006.

2) ராகம்: தர்பாரிகானடா தாளம்: ஆதி

பல்லவி

வருக, வருக ரமண தேவா, மனமிறங்கி வருகவே
தரும ஆலயத்தில் கொலுவீற்று பக்தரை ரக்ஷிக்கவே
(வருக)

அநுபல்லவி

உருகி உருகி தினம் பாடி உம்மை அழைக்கின்றோம்
வருந்தும் நெஞ்சின் துயர் துடைக்க விரைந்தே — நீ
(வருக)

சரணம்

வலிய வந்தாண்ட நீ எமைவிட்டு ஏகுதல் முறையோ?
சலிக்கும் எம்மனம் அசலமாய் நிலைத்திட அருளாயோ?
விலக்கிடுவாய் பொல்லா மண்ணாசை பொன்னாசை தனை
மலமாசிலா ஆனந்த வாழ்வினையும் பெற்றுய்ந்திடவே
(வருக)

(யோகானந்த ரமணதாஸ சகினோபவந்து).

[signature]

(composed on 26/5/2004)



ஸ்ரீ ரமணாச்ரமம்



ஸ்ரீ ரமணாச்ரமத்தில் தினம் நடைபெறும்
நாராயண சேவை (சாதுக்களுக்கு உணவளித்தல்)